தரமான சுவையான ஐஸ்கிறீம், குளிர்பானங்கள் மற்றும் சிற்றுண்டி வகைகளை புசித்து இன்புற
ராஜா குளிர் சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு, யாழ்ப்பாணம்.
(சி/538)

பக்கங்கள்: ஆறு

Registered as a NewsPaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஸ்பெஷல், நட்ஸ், வனிலா புருட்சலட் ஐஸ்கிறீம், கிறீம் சர்பத் ஆகியவற்றைச் சுவைத்து மகிழ்ந்திட
ராஜா குளிர் சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு, யாழ்ப்பாணம்.
(சி/538)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 11 வியாழக்கிழமை (23 – 02 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 91

# ஒரு யுத்த சூழ்நிலையை நோக்கி அரசு சென்று கொண்டிருக்கிறது

## தெற்கு சிங்களப் பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 23

வடபகுதி மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது உடன்பாடு காணப்பட்ட விடயங்களை கைவிட்டு, அரசு இப்போது ஒரு யுத்த சூழ்நிலையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. அரசிடம் நாம் விடுத்த வேண்டுகோள்களுக்கு இது வரையில் சாதகமான எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

— இவ்வாறு கூறியிருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம்.

தென்பகுதி சிங்களப் பத்திரிகைகளுக்கு கடந்த சனியன்று யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

தென்பகுதி சமாதானக் குழுவுடன் வந்த தெற்கு செய்தியாளர்களுக்கே இன்றைய அரசியல் நிலைமை குறித்து திரு. பாலசிங்கம் விளக்கினார்.


அன்ரன் பாலசிங்கம்

அவரது பேட்டியை 'லங்காதீப', 'திவயின' பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துள்ளன.

'லங்காதீப' பிரசுரித்த பேட்டியில் திரு. பாலசிங்கம் தெரிவித்ததாக வெளியான கருத்துகள் வருமாறு:-

வடபகுதி மக்களின் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாது அரசியல் தீர்வு பற்றி ஆராய்வது பயன்தரப் போவதில்லை.

ஜனாதிபதி சந்திரிகா இன்று தீவிரவாதிகளினாலும் இனவாதிகளினாலும் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதால், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தயக்கம் காட்டி வருகிறார்.

ஜனாதிபதி வடக்கை நோக்கி நீட்டிய சமாதானக் கரம் சுத்தமானதாக இருப்ப

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கில் புலிகள் நிர்வாகம்; அதுவே யதார்த்தம் - வாசுதேவ

கொழும்பு, பெப். 23

வவுனியாவுக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் நிர்வாகம், ஆட்சி நடக்கிறது. இதுவே யதார்த்த நிலைமை இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே அவர்களின் அனுமதி பெற்றே — பாஸ் பெற்றே — வடக்குக்கு விஜயம் செய்யலாம் இதனை ஒரு தடையாகக் கருதுவது பொருத்தமல்ல.

—இவ்வாறு யாழ்ப்பாணத்துக்குச் சென்ற சமாதானத் தூதுக்குழுவின் தலைவர் வாசுதேவ நாணயக்காரா ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் சொன்னதாவது:-

சிங்களவரும் முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்துக்குச் சென்று தமது அலுவல்களை கவனிக்கக்கூடிய சூழல் ஒன்றை உருவாக்குவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதி அளித்துள்ளனர்.

எமது விஜயத்தின் போது நாம் அறிந்துகொண்டவை அனைத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளையும் நாம் விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்போம்.

[5 ஆம் பக்கம் பார்க்க]

## இலங்கைக் கடற்படை சூடு! தமிழக மீனவர் மரணம்!!

சென்னை, பெப். 23

புதுக்கோட்டை, ஜகதாப்பட்டினம் அருகே கடலில் மீன் பிடிக்கச்சென்ற தமிழக மீனவர்மீது இலங்கைக் கடற்படை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மீனவர் ஒருவர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற இச்சம்பவத்தில் சாமிக்கண்ணு என்ற மீனவரே அந்த இடத்திலேயே உயிரிழந்தார்

இதற்குக் கண்டனம் தெரிவித்து மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சியும் அ. தி. மு. கவும் தனித்தனி அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

இலங்கைக் கடற்படையினரின் இத்தகைய அத்துமீறல்கள் தொடர்ந்து நடக்காமலிருக்க இந்திய மத்திய அரசு, இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடத்தித் தீர்வுகாண வேண்டும் என்று அவ்வறிக்கைகளில் கோரப்பட்டுள்ளது.

[உ–4]

## வடமத்திய மாகாணத்தில் தாதியர் திடீர் லீவில்!

கொழும்பு, பெப். 23

வடமத்திய மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் தாதிமார் எவரும் நேற்று வேலைக்குச் செல்லவில்லை.

தாதிகளில் ஒருவர் அவரது விருப்பத்திற்கு மாறாக இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மற்றைய தாதிமாரும் சுகவீனக் கடிதம் அனுப்பி விட்டு வேலைக்கு வராமல் நின்றுவிட்டனராம்.

அனுராதபுரம் மாவட்ட அரசாங்க சேவை ஐக்கிய தாதிமார் சங்க தொழில் சங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

[உ-4]

## ஜனாதிபதி செயலகத்தை படம் பிடித்த தம்பதி கைது

கொழும்பு, பெப். 23

கொழும்பு காலி முகத்திடலில் உள்ள ஜனாதிபதி செயலகத்தை — பழைய நாடாளுமன்றத்தை — புகைப் படம் பிடித்தது தொடர்பாக ஒரு தம்பதியை பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தியிருக்கிறார்கள்.

குருநாகலை சேர்ந்த இந்த தம்பதியரில் கணவர் தமிழர் மனைவி சிங்களப் பெண்.

கடந்த திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தை படம் பிடித்துக் கொண்டிருந்த போது இவர்கள் விசாரணைக்காக பொலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

(உ–4)

முச்சந்தி மாலி


நோயாளி வார்ட்டில...... நேசம்மா வீட்டில...!

## காமினி கொலை விசாரணைக்கு உதவ 5 இந்திய நிபுணர்கள் வருகை

கொழும்பு, பெப். 23

காமினி திஸநாயக்கா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளில் இலங்கை பொலீஸாருக்கு உதவுமுகமாக இந்திய நிபுணர் குழு ஒன்று கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்து அடைந்தது.

ஐந்து உறுப்பினர்கள் கொண்ட இக்குழு, காமினியைப் பலிகொண்ட வெடிகுண்டு வெடித்த இடத்தை நேற்றுச் சென்று பார்வையிட்டது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும் இலங்கை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய இந்தியக் குழுவினர் நேற்று இந்தியா திரும்பவிருந்தனர்.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட போது காமினி திஸநாயக்கா வெடிகுண்டுத் தாக்குதலில் மரணமடைந்தார் என்பது தெரிந்ததே.

இலங்கை அரசு கேட்டுக்கொண்டதன் பேரிலேயே இந்திய நிபுணர் குழு கொழும்பு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ–14)

## தபால் பொதிகள் வந்தன ஆனால் இறக்குவது தாமதம்

யாழ்ப்பாணம், பெப். 23

நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த "மாஹோ" கப்பலில் அத்தியாவசியம் பொருள்களுடன் 330 தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் ஒரு தொகுதி பொருள்களை இறக்கி முடித்து விட்டு காங்கேசன்துறை சென்ற மாஹோ, நேற்று பருத்தித்துறை துறைமுகத்துக்கு வராததால் தபால் பொதிகளை இறக்கும் வேலைகள் தாமதப்பட்டுள்ளதாகவும் —

எனினும் இன்று மாஹோ பருத்தித்துறைக்கு வந்ததும் இவற்றை உடனடியாக இறக்கி, தரம் பிரித்து உரியவர்களுக்கு விநியோகிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

யாழ் தபால் நிலைய பிரதம தாபல் அதிபர் திரு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

## 'சீ டான்ஸர்' வெள்ளியன்று வராது

யாழ்ப்பாணம் பெப். 23

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த 'சீ டான்ஸர்' கப்பல் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் திருமலையிலிருந்து யாழ் வருவதற்காக இக்கப்பல் சேவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கப்பல் சேவை நடத்தக் கூடிய எண்ணிக்கையிலானோர் பதிவு செய்யாததினால் கப்பல் சேவை பின்னர் கைவிடப்பட்டதாக தெரியவந்தது.

(உ-4–7)

## 4 சிங்கள மீனவர்களை புலிகள் ஒப்படைத்தனர்

யாழ்ப்பாணம், பெப் 23

நான்கு சிங்கள மீனவர்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் விடுதலைப் புலிகள் ஒப்படைத்தனர்.

திருகோணமலை கடற்பரப்பில் இருந்து பாதை தவறி வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் தத்தளித்த இந்தச் சிங்கள மீனவர்களை மக்கள் காப்பாற்றி விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்திருந்தனர்

இவர்களைப் பராமரித்த விடுதலைப் புலிகள், நேற்றுக் காலை அவர்களை விடுதலை செய்து செஞ்சிலுவையினரிடம் ஒப்படைத்தனர்.

காலி, அம்பாந்தோட்டைப் பகுதிகளைச் சேர்ந்த கே.பி. வீரசிங்க, எல். வை. வில்சன், கின்சிலால் குலரஜெயசுந்தர, சிலிபேனாட்ரட்ண வீர ஆகியோரே விடுவிக்கப்பட்ட சிங்கள மீனவர்களாவர்.

## பத்திரிகையாளர்கள் நாலாம் மாடிக்கு அழைப்பு

கொழும்பு. பெப் 23

கொழும்பில் நேற்றுசிலபத்திரிகைக் காரியாலயங்களுக்குச் சென்ற இரகசியப் பொலீஸார் அப் பத்திரிகைகளின் செய்தி ஆசிரியர்களை இன்று இரகசியப் பொலீஸாரின் 4 ஆம் மாடி அலுவலகத்துக்கு வருமாறு அழைகதுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது

பூரண செய்திச் சுதந்திரம் என்ற வாக்குறுதியை அரசு நிறைவேற்ற வில்லை என்று தெரிவித்தும் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டுள்ளதைக் கண்டித்தும் சுதந்திர செய்தியாளர் அமைப்பு நேற்று நுகேகொடையில் பேரணி ஒன்றை நடத்திய நிலைமையிலேயே இந்த அழைப்புக் கிடைத்துள்ளது.

(உ–க-6)

## கொழும்பில் மீண்டும் பொலீஸார் திடீர் சோதனை

கொழும்பு. பெப். 23

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பொலிசாரின் திடீர் சோதனைகள் தற்பொழுது தீவிரமாக நடைபெறுவதாக அறிய வருகின்றது.

கொட்டாஞ்சேனை, கோட்டை, வெள்ளவத்தை, யூனியன் பிளேஸ் போன்ற தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பொலிசார் திடீர் திடீரென சோதனைகளை மேற் கொண்டு அடையாள அட்டைகளைப் பரிசோதிக்கின்றனர்.

யாழ்ப்பாண முகவரி இடப்பட்ட அடையாள அட்டைகள் வைத்திருப்போர் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கென அழைத்துச் செல்லப் படுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன

புதிய அரசு பதவியேற்ற பின் சற்றுக் தணிந்திருந்த இவ்வாறான சோதனைகள் மீண்டும் முடுக்கி விடப் படடுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன

(க–4–7)

## உ.த. பரீட்சை விண்ணப்பம்: இறுதித் தினம் மார்ச் 31

கொழும்பு, பெப். 23

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ள ஜீ சி. ஈ. [உயர்தரப்] பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மார்ச் 31 ஆம் திகதி ஆகும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் பரீட்சை ஆணையாளர் யகம், பாடசாலை பரீட்சைகள் அமைப்பு, தரவுக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் மலேவீதி கொழும்பு – 2 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணம் ஒரு பாடத்திற்கான 50 ரூபா; 2 பாடங்களுக்கு 100 ரூபா; 3 பாடங்களுக்கு 150ரூபா: 4 பாடங்களுக்கு 200 ரூபா ஆகும்.

(க–4)

## கல்வி அமைச்சு தற்காலிக செயலாளர்

யாழ்ப்பாணம், பெப் 23

வட கிழக்கு மகாண கல்வி அமைச்சின் தற்காலிக செயலாளராக கல்விப் பணிப்பாளர் திரு. கே. தியாகராஜா நியமிக்கப் பட்டுள்ளார். கல்வி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய வால்டர் நாணயக்காராவின் இடத்திற்கே இந் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

வட கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. எஸ். கணேசநாதனால் இந் நியமனம் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

(க–4)

## மணிப்பூரில் எக்கட்சியும் அரசமைக்க முடியாதநிலை

புதுடில்லி, பெப். 23

இந்தியாவின் கிழக்கு மாநிலமான மணிப்பூரில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சியும் ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அறுபது இடங்களைக் கொண்ட சட்டசபையில் 51 இடங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கட்சிகள் பெற்றுள்ள ஆசனங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| மொத்த இடங்கள் | — 60 |
| முடிவுகள் வெளியானவை | — 51 |
| ★ இ. காங்கிரஸ் | — 18 |
| ★ மணிப்பூர் மக்கள் கட்சி | — 15 |
| ★ ஜனதா தளம் | — 06 |
| ★ காங்கிரஸ் (எஸ்) | — 01 |
| ★ [illegible] | — 02 |
| ★ சுயேச்சை மற்றும் ஏனைய கட்சிகள் | — 09 |

[உ]

## அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், பெப். 23

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் நால்வர் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்.

'கெல்விற்றாஸ்' நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஒட்டோ கொயெச் திட்டமிடல பணிப்பாளர் மகறாவ், 'கெயர்' நிறுவனத்தைச் சேர்ந்த திட்டமிடல் பணிப்பாளர் திருமதி லோறா/வுவன்/வேக், ஒருங்கிணைந்த பீடைமுகாமைத்துவத்திற்கான திட்டப் பணிப்பாளர் கலாநிதி கீத்ஜோன் ஆகிய பிரதிநிதிகளே கிளாலியூடாக நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்.

'கெல்விற்றாஸ்' நிறுவனத்தின் பிரதிநிதிகள் யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின இணையத்தின் மாதாந்தக் கூட்டத்தில நேற்று சந்தித்து கலந்துரையாடினர். மனித முன்னேற்ற நடுநிலையத்தில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இதேவேளை 'கெயர்' பிரதிநிதிகள் நேற்று பிற்பகல் யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இணையப் பிரதிநிதிகளை சந்தித்தனர். (உ–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோசவ் வாஸ் நன்றிவிழாச் சிறப்பிதழ்

(23 - 02 - 1995)

## யாழ். ஆயரின் வாழ்த்துச் செய்தி

இலங்கை மண்ணில் வாழும் அனைத்து மக்களையும் இறைவன் ஆசீர்வதித்து பராமரிக்கின்றார் என்பதற்கு யோசவ்வாஸ் அடிகளாரின் முத்திப்பேறுபெற்ற பட்டம் ஒரு அடையாளமாக அமைகின்றது. இதனையிட்டு இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களாகிய நாம் நன்றி கலந்த உள்ளங்களோடு இறைவனை வாழ்த்தி போற்றுகின்றோம். சிறப்பாக முத். யோசவ்வாஸ் அடிகளாரின் இறைபணி யாழ். குடாநாட்டு மக்கள் மத்தியிலும் செழித்தோங்கியதை நினைத்து யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க மக்களோடு இணைந்து இறைவனைப் புகழ்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பல்வேறு இன்னல்கள் மத்தியில் தனது இறைபணியை வெற்றிகரமாக நிறைவேற்றி இன்று விண்ணகத்தில் இறைவனால் மகிமைப்படுத்தப்பட்டிருக்கும் யோசவ் வாஸ் அடிகளார் துயரங்கள் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் நாமும் எமது விசுவாசத்தில் உறுதியாக நின்று இறைபற்றுடன் எமது பணியை இறைவனுக்குகந்த வகையில் நிறைவேற்ற எமக்காக இறைவனிடம் மன்றாடுவாராக. தொடர்ந்தும் எமது மண்ணையும், மக்களையும் இறைவன் ஆசீர்வதித்து பராமரிக்க வேண்டுமென்று அவர் பாதங்களில் எம்மை அர்ப்பணிக்கின்றோம்

இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம்.
யாழ் ஆயர்

## யாழ். யோசவ் வாஸ் குழுவின் ஆசிச்செய்தி

பாரம்பரியமாக யோசவ்வாஸ் அடிகள் முதன்முதலில் யாழ் மண்ணில் கால்பதித்த இடம் கொழும்புத்துறையில் உள்ள இறங்குதுறையென வழங்கப்பட்டு வருகிறது ஒரு பிராமண குடியில் பிறந்த யோசவ்வாஸ் தாம் ஏற்றுக் கொண்ட கத்தோலிக்க மறையை இலங்கையில் அழியவிடாது காப்பதற்காக கடும் சவால்கள், எதிர்ப்புகள் காட்டிக்கொடுத்தல் மத்தியில் பணிபுரிந்தார்.

அவரின் அயராத உழைப்பினால் இலங்கையில் கத்தோலிக்க மறை நிலைத்து செழித்து வளர்ந்தது இம்மறை இன்றும் பல அநீதிகள் மத்தியிலும் உண்மைக்கும், நீதிக்கும் குரல்கொடுத்து உறுதியாக நிற்கிறது.

முத்திப்பேறு பெற்ற யோசவ்வாஸ் வாழ்வில் விளங்கிய மனிதப் பண்புகள், ஆன்மீக இயல்புகள் இன்றும், என்றும் நிலைக்க அடிகளுக்கு எடுக்கும் விழா எமக்கு உறுதி அளிப்பதாக.

—யாழ். யோசவ்வாஸ் குழு.

## இன்னல்கள் மத்தியில் மாறுவேடத்தில்
## யாழ். வந்த யோசவ் வாஸ் அடிகள்

யோசவ் வாஸ் அடிகள் இந்தியாவைச் சேர்ந்தவர். கோவாவைத் தமது பதியாகக் கொண்டவர். பிராமண குலத்தவர்.



கோவா நகரின் பேராலயத்தைச் சேர்ந்த ஒரு உயர் நிலைச் சமயக்குருவி மிருந்து இலங்கைத் தீவில் கத்தோலிக்கர் படும் நெஞ்சை உருக்கும் இன்னலகளை அறிந்து கொண்டார். இலங்கையில் துயருறும் கத்தோலிக்க மக்களுக்குத் தாம் எப்படியும் உதவி செய்ய வேண்டுமென்ற அவாவினால் தூண்டப்பட்டார்.

காலப்போக்கில் ஆபத்து நிறைந்த தமது திட்டத்தை நிறைவேற்றும் வழியைக் கண்டு கொண்டார். பல அபாயங்களைத் தாண்டியும் சொல்லற்கரிய இன்னலகளை அனுபவித்தும் அடிமை ஒருவனைப்போல் மாறுவேடம் தாங்கி, யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

அது 1687 ஆம் ஆண்டின் நடுப்பகுதி. யாழ்ப்பாணப் பட்டணத்தில் சில பிரமாணிக்கமான கத்தோலிக்கரை பெரு முயற்சி எடுத்தே கண்டுபிடித்தார். காரணம், அந்நாட்களில் தண்டனைச் சட்டங்களுக்குப் பயந்து, தமது சமயத்தை மறைத்து வாழ வேண்டிய நிலை கத்தோலிக்கருக்கு இருந்தது.

தமக்குப் பணிபுரியும் நோக்குடன் குறுக்கிடும் இடர் அனைத்தையும் ஏற்று, துணிந்து வந்த ஒரு கத்தோலிக்க குரவர் தான் பிச்சைக்கார வடிவத்தில் வந்துள்ளார் என்பதை அறிந்த பொழுது, கத்தோலிக்க மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

இரவுவேளை யாரும் சந்தேகப்படாது இல்லத்தில் அவர்கள் ஒன்றுகூட முடிவு செய்தனர். ஏறத்தாழ முப்பதாண்டு இடைவெளிக்குப் பின் திருப்பலியில் பங்கு கொள்ளவும், நற்கருணை பெறவும், திருமணங்கள் குரவர் ஒருவரால் ஆசீர்வதிக்கப்படவும், குழந்தைகள் திருமுழுக்குப் பெறவும் அவர்களுக்கு வாய்ப்புக் கிட்டியது அது அவர்களுக்கு ஆறுதலை அளித்தது.

காலப்போக்கில் பாதுகாப்புக் கருதி யோசவ்வாஸ் அடிகள் "சின்ன உரோமை" என அழைக்கப்பட்ட சில்லாலைக்குக் கூட்டிச் செல்லப்பட்டார். அது பட்டணத்திலிருந்து சற்றுத் தூரத்தில் உள்ளது. அங்குள்ள மக்கள் மற்றையோரிலும் பார்க்கத் திடகாத்திரமாகத் தமது விசுவாசத்தைக் காக்க உறுதி நிலையை மேற்கொண்டமையால் இப்பெயர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அங்கிருந்து யோசவ்வாஸ் அடிகள் இரகசியமாக யாழ்ப்பாணப் பட்டணத்திலும் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலும் வாழும் மக்களைச் சந்தித்தார். தமது விசுவாசத்தில் உறுதியாயிருந்த கத்தோலிக்கரைத் திடப்படுத்தியதுமல்லாது, கத்தோலிக்க சமயத்தை விட்டு விலகிச் சென்றோரையும், பிரிவினைச் சகோதரர்களையும் இந்துக்களையும் மனம் திருப்பினார்.

யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்க சமயம் மீண்டும் தழைத்தோங்கத் தொடங்கியது. விசுவாசிகளின் இல்லங்களில் ஒவ்வொரு இரவும் பாட்டுக்களினதும், செபங்களினதும் ஒலி முழங்கத் தொடங்கியது ★

பேரருட் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை
ஆண்டகை
முன்னாள் யாழ். ஆயர்

## இன்று
முத்திப்பேறு பெற்ற



### யோசவ் வாஸ் நன்றி வழிபாடு

காலம்: 23-2-1995 வியாழன், மாலை 4-30மணி
இடம்: கொழும்புத்துறை — புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்பில் திருத்தந்தை IIஆம் அருள்-சின்னப்பரால் முத்திப்பேறு பெற்றவர் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட யோசவ்வாஸ் யாழ். வந்து இறங்கிய இடமாகிய கொழும்புத்துறையில் நன்றி வழிபாடு.

★ யாழ். மறைமாவட்ட அனைத்து ஆலய திருச்சபைகளும் அணி திரண்டு வருக ★

✶ நிகழ்ச்சி நிரல் ✶

மாலை 4-30மணி;
ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி
மாலை 5-45 மணி
சிறப்பு நிகழ்வுகள்
மாலை 6-30 மணி
"யோசவ் வாஸ்" நாட்டுக்கூத்து
(மெருகூட்டப்பட்ட ஆட்டக்கூத்து)

திருப்பவனி மாலை 4-30 மணிக்கு பாஷையூர், புனித அந்தோனியார் ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகும்.

குறிப்பு!
கொழும்புத்துறை துறைமுகத்தில் நடைபெற விருந்த நினைவுச்சின்ன திறப்பு வைபவம், தவிர்க்க முடியாத காரணங்களால் இன்று நடைபெற மாட்டாது.

யோசவ் வாஸ் செயலகம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.


நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துவோர்

அன்ரன் செல்வராசா
புதிய கலைக் களஞ்சியம்
நெல்லியடி.

★ யுபிலி ★
விற்பனை நிலையம்
மெயின் வீதி, நெல்லியடி, கரவெட்டி.

நியூ சிற்றம்பலம்
களஞ்சியம்
இல. 90, முதன்மைச் சாலை,
நெல்லியடி, கரவெட்டி.

சிதம்பரப்பிள்ளை
பொத்தக சோலை
நெல்லியடி, கரவெட்டி.

ஜமுனா வாணிப நிலையம்
நெல்லியடி. கரவெட்டி.

லபேட்டி மோட்டர்ஸ்
நெல்லியடி, கரவெட்டி.

நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துகிறோம்
லைடன் காமன்ஸ்
யாழ்ப்பாணம்.

நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துவோர்

சிற்றி மெடிக்கல்ஸ்
யாழ்ப்பாணம்.

சுதர்சனம் (ஐடியல்)
வெதுப்பி விற்பனை அகம்
பிரதான சாலை, நெல்லியடி.

சுபாஸ் வெதுப்பகம்
பிரதான வீதி. நெல்லியடி.

ஹப்பி ரெக்ஸ்ரைல்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி

விளம்பர இலக்கம் C/660


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 01 — 10 — 1965 | 06 — 03 — 1994 |


அமரர்
**கனகரத்தினம் அரிச்சந்திரன்**
திதி: 23 – 02 – 1995

எங்கள் குடும்ப விளக்காய் இருந்து சிவபதம் எய்திய கனகரத்தினம் அரிச்சந்திரன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று 23 - 2 - 95 வியாழக்கிழமை அவரது மூளாய் இல்லத்தில் நடைபெறும் என்பதையும் அத்தினத்தில் அவரது சுற்றத்தார், அன்பர்கள் அனைவரும் பங்குகொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். அவரது ஆத்ம சாந்திக்கு இறைவனை பிரார்த்திக்கின்றோம்

உன்பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா, தங்கை
சாந்தகுமாரி, அம்மம்மா சித்தப்பா
சித்திமார்

குமரன் புலம்,
மூளாய், — சுழிபுரம் (835)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 25 — 02 — 1912 | 24 — 01 — 1995 |

திருமதி
**சரவணமுத்து நல்லபிள்ளை**
(களபாவோடை, ஏழாலை)

எங்கள் அன்புத் தெய்வமே! அணையாத தீபமே
உன்னை எண்ணும்போது உள்ளம் நெகிழுதம்மா!
வான்நிலவ நீ மறைந்தாய் அம்மம்மா!
மாதமொன்றும் ஆனதம்மம்மா!
உன் ஆனைமுகம் பார்த்து
உற்றதுணை உங்களைப்போல்
கிட்டுமோ இவ்வையகத்தில்.

உங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

254, சண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (35329)

### ஆலயங்களில்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் பகவத்கீதா ஹோமப் பெரு விழா நாளை வெள்ளிக்கிழமை முதல் 27 ஆம் திகதி திங்கட் கிழமை வரை 4 நாட்களுக்கு நடைபெறும்.

இறுதி நாளான திங்கட் கிழமை அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் அருளுரையும் திரு த சிவகுமாரன், திரு. சு செல்லத்துரை ஆகியோரின் சொற்பொழிவும் விசேட மேளக் கச்சேரிகளும் இடம்பெறும். (ஐ–28-14)

### ஆரியரத்னாவுக்கு பணிப்பாளர் பதவி?

கொழும்பு, பெப் 23

சர்வோதய இயக்கத்தின் தலைவர் டாக்டர் ஏ. ரி. ஆரியரத்னா ஜனசக்தி நம்பிக்கை நிதியத்தின் ஒரு பணிப்பாளராக நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று அவரின் பெயரை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

ஆரியரத்னாவை நியமிப்பதற்கு அரசாங்க வட்டாரங்களில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாக "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ–14)

## அறிவித்தல்

தும்பளை. நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவிலின் சீனியரின் பரம்பரைப் பூசகரான தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் ஆகிய நானே தொடர்ந்தும் இப்போது பூசகராக இருக்கிறேன் என்பதை அடியார்கள் உட்படச் சகலருக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

ஓம் ஸ்ரீம் பிரபன்ன துக்க நிவாரிண்யை நமக.

தி.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
நெல்லண்டை பத்திரகாளி
அம்மன் கோவில் பிரதமகுரு.
(35340)

## கண்ணீர் அஞ்சலி

பண்டிதர்
**அம்பலவாணர் பொன்னுத்துரை**

எமது பாடசாலையில் ஆசிரியராகவும், பல வருடங்கள் அதிபராகவும் பணிபுரிந்து பாடசாலையின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் அயராதுழைத்த அன்னாருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

அதிபர்,
ஆசிரியர், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சபை
யா/ கரம்பொன் சண்முகநாத
மகா வித்தியாலயம்

[35335]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BE A FRIEND

# சர்வதேச றோட்டறி அமைப்பின் 90 ஆவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

மலர் அமைப்பு: யாழ். றோட்டறிக் கழகம்

(23-02-1995)

# சேவையை நோக்கமாகக் கொண்ட றோட்டறி

உலகில், சேவையை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்புகளுள் முதலில் தோன்றியது றோட்டறி அமைப்பாகும். 90 ஆண்டுகளை இன்று நிறைவு செய்யும் இவ் அமைப்பானது பல்வேறு வழிகளில் விவரிக்கப்படுகின்றது.

உள்ளூர்களில் இயங்கும் றோட்டறிக்கழகங்களின், சர்வதேச ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட பாரிய அமைப்பே றோட்டறி ஆகும். இது சர்வதேச றோட்டறி [Rotary International]என அழைக்கப்படுகிறது.

றோட்டறியின் உயிர்நாடியாக விளங்குகின்ற தனிப்பட்ட றோட்டறிக்கழக அங்கத்தவர் (றோட்டேரியன் Rotarian - Rtn] அவர் சார்ந்துள்ள கழகத்தில் அங்கத்துவம் பெறுவார். சர்வதேச றோட்டறியில் தனிப்பட்ட அங்கத்தவர் அங்கத்துவம் பெற முடியாது. றோட்டறிக் கழகங்கள் மட்டுமே சர்வதேச றோட்டறியில் அங்கம் வகிக்க முடியும். சர்வதேச றோட்டறியின் தலைமையகம் ஐக்கிய அமெரிக்காவில், இல்லினோய் மாநிலத்தின் இவன்ஸ்ரோன் நகரில் அமைந்துள்ளது.

உத்தியோக பூர்வமாக றோட்டறி என்பது, மனிதாபிமான சேவையை வழங்குவதிலும் அனைத்துத் தொழில் துறையிலும் உயர்ந்த நெறியைப் பேணுவதிலும், உலகில் சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும் வளர்ப்பதிலும் ஈடுபட்டு வருகின்ற—

வணிக மற்றும் தொழில் சார் துறைகளைச் சேர்ந்தோரை உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைக்கின்ற— ஓர் அமைப்பென வரையறுக்கப்படும்.

விசேடமாகக் கூறின், ஓர் றோட்டறிக் கழகமானது அச் சமூகத்தில் வாழுகின்றவர்களின் தனிப்பட்ட, தொழில் சார் சமூகத்தேவைகளைநிறைவேற்றுகின்ற சேவையை தமது அடிப்படை இலட்சியமாக ஏற்றுக்கொண்டுள்ள மேற்படி சமூகத்திலுள்ள வணிக மற்றும் தொழிற்றுறை சார்ந்தவர்களை தன் அங்கமாகக் கொண்டிருக்கும்.

உண்மையில் 'றோட்டறி உலகம்' எங்ஙனும் உயிரோட்டமாக விளங்கும் 'தன்னலமற்ற சேவை' (Service Above self) எனினும் குறிக்கோள் சேவையின் இலட்சியத்தைத் தெளிவாக விளங்குவதோடு சிந்தனையிலும், செயலிலும்சேவையில்விருப்பமுள்ள மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கின்றது.

எங்கெல்லாம் குழப்பங்கள் ஏற்படுகின்றனவோ அங்கு அமைதியை நிலைநாட்டவும், அழகற்ற இடங்களை அழகுறச் செய்யவும், ஏகாந்தமும், தப்பெண்ணமும் நிலவும் இடங்களில் தோழமையை உருவாக்கவும், வறுமையும் நோயும் உள்ள இடங்களில் மகிழ்ச்சியையும், சுகத்தையும் பேணவும் றொட்டேரியன்கள் கடும்முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

றோட்டறியானது பல்வேறு இனத்தவர்களையும், மத நம்பிக்கை கொண்டவர்களையும், அரசியல் நோக்கமுடையவர்களையும் பக்கச் சார்பற்ற, நட்புறவான சூழலில் ஒன்றிணைந்து செயற்பட வைக்கிறது. தமக்கிடையே வேறுபட்ட கருத்துக்கள் இருப்பினும் சேவையின் பொது இலக்கினை அடையும் விதத்தில் றொட்டேரியன்கள் செயற்பட தோழமையுணர்வு வழி வகுக்கிறது.

பிரிவினைப் போக்கினால் அல்லது நடவடிக்கைகளினால் மக்களிடையே பல சந்தர்ப்பங்களில் பிளவுகள் ஏற்கின்றபோது, அந்த நடவடிக்கைகள் பற்றிய கருத்துக்களைத் தவிர்த்து பொதுவான நலன்கள் பற்றி அழுத்திக் கூறி புரிந்துணர்வையும், ஒற்றுமையையும் வளர்ப்பதில் றோட்டறி அமைப்பு ஈடுபட்டு வருகிறது.

றொட்டேரியன்களின் அரசியல், சமய நம்பிக்கைகள் அவர்களது சொந்த விடயமாகக் கருதப்படுகிறது. ஆனால் அவர் தனது நாட்டின் மீது பற்றுடையவராகவும், தனது சமயத்திற்கு விசுவாசியாகவும் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## றோட்டறி அமைப்பு உருவானது எப்படி?

இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலம் மிகுந்த நெருக்கடியையும், கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறையையும் கொண்ட அமெரிக்காவின் சிக்காகோ மாநிலத்தில் தொழில் புரிந்த போல் ஹரிஸ் (Paul-Harris] எனும் இளவயதுடைய சட்டத்தரணி எதையோ இழந்தவர் போல் தனிமையினால் வாடினார். அதன் விளைவாக அவரது சிந்தையில் முகிழ்த்த எண்ணத்தினைத் தனது நண்பர்கள் மூவருடன் பகிர்ந்து கொள்ள விரும்பினார்.

1905ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி இனிய மாலை நேரத்தில் போல் ஹரிஸ் அவர்களும், அவரது நண்பர்களான நிலக்கரி வியாபாரி சில்வெஸ்ரர் சியில், சுரங்கப் பொறியியலாளர் கஸ்ரவஸ் லோரர், உடை தைக்கும் வணிகர் ஹிறாம் ஷோரே ஆகியோரும் 127, வடக்கு டியர்போன் வீதியில் உள்ள யுனிற்றிக் கட்டடத்தின் 711ஆம் இலக்க அறையில் அமைந்திருந்த கஸ். லோரின் அலுவலகத்தில் சந்தித்தனர். இத்தினத்திலேயே றோட்டறி அமைப்பானது உருவெடுத்தது.

வணிகத் துறையிலுள்ளவர்கள் காலத்துக்குக் காலம் ஒன்றுகூடி தங்களுக்குள் தோழமையை வளர்ப்பதும், வர்த்தக, தொழில் துறை வட்டத்தில் தங்கள்,நடவடிக்கைகளை விரிவுபடுத்தி ஒருவருக்கொருவர் அறிமுகமாவதே போலின் எண்ணமாக இருந்தது.

இக்கலந்துரையாடலின் முடிவில் ஓர் ஆண்கள் கழகத்தை உருவாக்குவதெனவும், ஒவ்வொரு வணிக மற்றும் தொழிற்றுறைக்கு ஓர் அங்கத்தவர் என அங்கத்துவத்தை மட்டுப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

வாராந்தக் கூட்டம் ஒவ்வொரு அங்கத்தவரது வேலைத்தலத்திலும் ஓர் ஒழுங்குமுறையில் நடத்தப்பட்டது ஒருவரது தொழிற்றுறையை மற்றவருக்கு அறிமுகப்படுத்துவது, தரமுயர்த்துவது என்ற நோக்கில் சுழற்சி முறையில் வடிவமைக்கப்பட்ட இக்கூட்டத் தொடரே பின்னர் சுழற்சி முறையின் ஆங்கிலப் பதமான Rotary என்ற பெயரால் அழைக்கப்படலாயிற்று.

இவர்களால் சம்பிரதாய பூர்வமாக அமைக்கப்பட்டதே ''சிக்காகோ றோட்டறிக் கழகம்'' ஆகும்.

இதன் முதலாவது அங்கத்தவர் பட்டியலில் 30 பேர் இருந்தனர். 1907 இல் — அதாவது றோட்டறிக்கழகம் உருவாகி இரண்டு ஆண்டுகளின் பின்னர் முதலாவது சமூக நலத்திட்டம் ''பொது வசதி நிலையம்'' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. 1908 இல் சான்பிரான்சிஸ்கோ நகரில் இரண்டாவது றோட்டறிக்கழகம் உருவாக்கப்பட்டது.

1910 இல் அமெரிக்காவில் 1,500 அங்கத்தவர்களைக் கொண்ட 16 கழகங்கள் உருவாக்கப்பட்டன. 1910 இல் சிக்காகோ நகரில் றோட்டறிக் கழகத்தின் முதலாவது ஆண்டு மாநாடு நடைபெற்றது.

1911 இல் மினசோட்டாவைச் சேர்ந்த பிராங் கொலின்ஸ் என்பவர் மற்றவர்களுக்கு தொண்டு செய்யும் முக்கியத்துவத்தை முன்வைத்தார்.

அமெரிக்காவின் டிற்றோயிட் நகரில் 1950 இல் நடைபெற்ற மாநாட்டில் இவை றோட்டறியின் உத்தியோக பூர்வ குறிக்கோள் வாசகங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் 1989 இல் கூடிய றோட்டறியின் சட்ட உருவாக்கச் சபை, சர்வதேச றோட்டறியின் பிரதான குறிக்கோள் வாசகமாக 'தன்னலமற்ற சேவை' (Service Above Self) என்பதை ஏற்றுக் கொண்டது.

1911இல் முதல் தடவையாக அமெரிக்காவுக்கு வெளியே கனடாவில் றோட்டறிக் கழகம் நிறுவப்பட்டது. ''த நாஷனல் றொட்டேறியன்'' என்ற சஞ்சிகையும் வெளியிடப்பட்டது.

1912 இல் மினசோட்டா மாநிலத்தின் டுலுத் என்ற இடத்தில் நடைபெற்ற வருடாந்த மாநாட்டில் ''றோட்டறிக் கழகங்களின் சர்வதேச இணையம்'' எனப் பெயர் மாற்றப்பட்டது. இதுவே 1922 இல் மேலும் சுருக்கப்பட்டு சர்வதேச றோட்டறி (Rotary International) என அழைக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் றோட்டறியின் இலச்சினை தூசு படிந்து சுழல்வது போன்ற ஒரு சாதாரண வண்டிச் சக்கரமாக இருந்தது. 1923 இலேயே தற்போதைய இலச்சினை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இங்கிலாந்தில் உள்ள லண்டன் றோட்டறிக் கழகம் றோட்டறி இயக்கத்துக்கு ஒரு நிலையான பங்களிப்பை வழங்கியதால் 1926 ஆம் ஆண்டு நினைவில் நிற்கும் ஆண்டாக விளங்குகிறது.

றோட்டறி அமைப்பானது சேவையை நோக்கமாகக் கொண்ட பாரிய தொண்டு நிறுவனங்கள் பலவற்றுக்கும் முன்னோடியாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. 1915இல் உருவான ஒப்ரிமிஸ்ட் இன்ரநாஷனல், 1919இல் உருவான பெண்கள் தொண்டர் அமைப்பான ஷொன்ரா இன்ரநாஷனல், 1915இல் உருவான கிவானிஸ் இன்ரநாஷனல், 1917இல் உருவான லயன்ஸ் இன்ரநாஷனல், 1919இல் உருவான ஒப்ரிமிஸ்ட் இன்ரநாஷனல், பெண்கள் தொண்டர் அமைப்பான ஷொன்ரா இன்ரநாஷனல் ஆகியன சர்வதேச றோட்டறியின்பின்னர் வடிவமைக்கப்பட்ட சில கழகங்களாகும்.



றோட்டறியின ஸ்தாபக:
பால் ஹரிஸ்
(PAUL HARRIS]

1922இல் உருவாக்கப்பட்டு தற்போது 'றீஹபிலிற்றேஷன் இன்ரநாஷனல்'' என அழைக்கப்படும் ஊனமுற்ற குழந்தைகளுக்கான சர்வதேச சங்கம், ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பு (யுனெஸ்கோ) என்பன உள்ளிட்ட பல பிரபல சர்வதேச நிறுவனங்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டது றோட்டறியே,

பரந்த அளவில் சர்வதேச ரீதியில் கல்வி, கலாசார பரிவர்த்தனைக்கான அமைப்புப் பற்றி ஆராயக் கூட்டப்பட்ட, 1942இல் லண்டனில் நடைபெற்ற றோட்டறி வருடாந்த மாநாட்டிலேயே ''யுனெஸ்கோ''வுக்கு வித்திடப்பட்டது.

தற்போது உலகிலுள்ள 172 நாடுகளில் 11 இலட்சத்திற்கு மேற்பட்ட சேவை மனப்பான்மை கொண்ட ஆண்களும், பெண்களும் சுமார் 25,000க்கு மேற்பட்ட றோட்டறிக் கழகங்களில் அங்கம் வகிக்கிறார்கள்.

இக் கழகங்கள் வாராந்தம் மதிய உணவின் போது அல்லது இரவுணவின் போது கூடுகின்றன. சிலவேளைகளில் காலை உணவின் போதும் கூடுகின்றன.

கழகத்தின் செயற்பாட்டை நடத்துவது, அதன் சேவைத் திட்டங்களை விவாதிப்பது போன்ற விடயங்களை ஆரம்பிப்பதன் முன்னர், அங்கத்தவர்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும், தோழமையை வளர்த்துக் கொள்ளவும் இந் நடைமுறை உதவுகின்றது. சமூகத்தில் காணப்படுகின்ற.ஒவ்வொரு தொழிற்துறை வணிகத்துறை நிறுவனங்களிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி என்ற அடிப்படையில் அழைப்பின் பேரிலேயே அங்கத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் ஒவ்வொரு கழகமும் அது சார்ந்துள்ள சமூகத்தினை முழுமையாகப் பிரதிநிதித்துவம் செய்வதற்காகவே இவ்வாறான வகைப்படுத்தல் (Classitication) முறை உருவாக்கப்பட்டுள்ளது.

## றோட்டறி நிதியம் [Rotary Foundation]

சர்வதேசரீதியாக கல்வித் திட்டங்கள் மூலமும். நன்கொடைத் திட்டங்கள் மூலமும் உலகளாவிய ரீதியில் புரிந்துணர்வையும், சமாதானத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் சர்வதேச றோட்டறியின் 6ஆவது தலைவர் ஆர்ச் கிளம்ப் அவர்களால் 1917இல் றோட்டறி நிதியம் (Rotary Foundation] ஆரம்பிக்கப்பட்டது. 1947இல் ஸ்தாபகர் போல் ஹரிஸ் அவர்களின் மறைவையடுத்து உலகம் முழுவதிலுமிருந்து அவரது ஞாபகார்த்தமாக பெருமளவு நன்கொடைகள் றொட்டேரியன்களால் வழங்கப்பட்டன. றோட்டறி நிதியம் மறுஆண்டிலிருந்து செயற்படத் தொடங்கியது.

இதன்கீழ் பல புலமைப் பரிசில்கள் குழுநிலைக் கல்விப் பரிவர்த்தனைகள், 3H-நிகழ்ச்சித்திட்டம் (சுகாதாரம்,பட்டினி, மனித அபிவிருத்தி], அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு உதவுதொகை றோட்டறி சமாதான நிகழ்ச்சித்திட்டம். போலியோவுக்கெதிரான திட்டம் போன்ற பல மனித நேயச் சேவைகள் வழங்கப்படுகிறது.

2005ஆம் ஆண்டளவில் உலகிலிருந்து போலியோ நோயை முற்றாக நீக்க உறுதி பூண்டு செயற்படுகிறது றோட்டறி நிதியம்.

## இன்ரறக்ட், றோட்டறக்ட் கழகங்கள்

சேவை, சர்வதேச புரிந்துணர்வு ஆகியன தொடர்பாக அர்ப்பணிப்புடைய இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும், சந்தர்ப்பம் வழங்குதலோடு, அவர்களது தனிப்பட்ட ஆளுமை, அறிவு, திறனை உயர்த்துவதற்கான நோக்கிலும் றோட்டறியின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டதே இன்ரறக்ட், றோட்டறக்ட் கழகங்களாகும்.

இன்ரறக்ட் கழகங்களில் 14 முதல் 18வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் அங்கத்தவராகலாம். International Action என்ற சொற்களிலுள்ள தடித்த எழுத்துக்களின் கூட்டே Interact ஆகும்.

1962 இல் அமெரிக்காவில் மெல்போர்ன் நகரின் முதலாவது இன்ரறக்ட் கழகம் உருவாக்கப்பட்டது. தற்போது உலகிலுள்ள 93 நாடுகளில், 7,000க்கு மேற்பட்ட கழங்களில் 1,50,000க்கு மேற்பட்ட செழிப்பான அமைப்பாக உருவாகியுள்ளது.

பாடசாலை மட்டத்தில் அல்லது சமூக மட்டத்தில் அமைக்கப்படும் இக்கழகங்களின் திட்டங்களும், செயற்பாடுகளும் அவர்களாலேயே உருவாக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட கழக உத்தியோகத்தர்களின் வழிகாட்டலில் நிறைவேற்றப்படும். ஒவ்வொரு கழகமும் ஒரு றோட்டறிக்கழகத்தின் அனுசரணையுடனேயே இயங்கும். உரிய வழிகாட்டல்களை றொட்டேரியன்களிடம் பெறுவதன் மூலம் சமூகத்தில் உதவி தேவைப்படும் அங்கவீனமுற்ற சிறுவர்கள், வயதானவர்கள் போன்ற பலதரப்பினர்க்கும் சேவையாற்றி வருகின்றன.

இதேபோன்று 1969ஆம் ஆண்டில் 18முதல் 29 வயது வரையிலான இளைஞர்கள் இருபாலாருக்குமென உருவாக்கப்பட்டதே றோட்டறக்ட் கழகங்களாகும். சேவை, நட்புறவு என்பவற்றூடாக சமூகத்தின் பௌதிக, சமூகத் தேவைகளை நிறைவேற்றுவனவாக இவை அமைக்கப்பட்டன. உலகில் 122 நாடுகளில், 426 றோட்டறி மாவட்டங்களில் 6,300க்கு மேற்பட்ட கழகங்கள் இயங்கி வருகின்றன. இவையும் றோட்டறிக் கழகமொன்றின் அனுசரணையுடன்இன்றறக்ட் கழகத்தை ஒத்த கட்டமைப்பில் இயங்கி வருகின்றன.

## றோட்டறிக் கிராமியக்குழு (Rotary Village Corps)

றோட்டறிக் கழகமொன்று இயங்குகின்ற சமூகத்திலுள்ள ஆண்களும்,பெண்களும் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அறிவு, ஆற்றல், அனுபவம் என்பவற்றை றோட்டறிக்கழகத்தினூடு பெற்று சுய உதவி மூலம் அவர்கள் தமது வாழ்க்கையை மேம்படுத்தி ஏனையவர்களுக்கும் அவ்வாறான உதவியைச் செய்யும் நோக்கில் அமைக்கப்பட்டனவே றோட்டறி கிராமியக் குழுக்களாகும்.

நாளாந்தம் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள், போஷாக்கின்மை, கல்வியறிவின்மை, வீடின்மை போன்றதான பூர்த்திசெய்ய வேண்டிய தேவைகள் என்பவற்றை தாங்களே தீர்த்துக் கொள்ளும் வகையில் இயங்கி வருகின்றன.

இவ்வாறு கடந்த 90 ஆண்டுகளாக இயங்கிவரும் இச்சர்வதேச அமைப்பில் ஓர் அங்கமாக கடந்த 54 ஆண்டுகளாக எமது யாழ் றோட்டறிக் கழகமும் குடாநாட்டு மக்களுக்குப் பல்வேறு மனித நேயச் சேவைகளை ஆற்றி வருகிறது. எமது சேய்களாக 20 இன்ரறக்ட் கழகங்களும், 4 றோட்டறக்ட் கழகங்களும், 9 றோட்டறிக் கிராமியக் குழுக்களும் சேவையாற்றி வருகின்றன.

மருத்துவ, கண் சத்திர சிகிச்சை முகாம்கள், தொழிற் பயிற்சி வழங்கல், அகதிகளுக்கான உதவிகள், அங்கவீனர்களுக்கு முச்சக்கரவண்டி வழங்கல், சூழல் பாதுகாப்பு, வசதி குறைந்த பல்கலைக் கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் போன்ற தொடர் வேலைத்திட்டங்களும், வேறு பல செயற்திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ★

தொகுப்பு:
Rtn. PHSM க. குமாரதாசன்
கழகச் சேவை இயக்குநர் 1994/95

## இன்றைய நிகழ்வுகள்

காலை 8-30 :
புதிய இன்ரறக்ட் கழகம் அங்குரார்ப்பணம்
- இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.

காலை 10-00 :
இரத்ததானம்

காலை 11-00 :
நூல்கள், உடைகள் அன்பளிப்பு

பி. ப. 2-30 :
புதிய இன்ரறக்ட் கழகம் அங்குரார்ப்பணம்
- கைதடி நவீல்ட் பாடசாலை

மாலை 4-30 :
முச்சக்கர வண்டிகள் வழங்கல்.
- ஞானம்ஸ் ஹோட்டல், யாழ்ப்பாணம்.

(விளம்பர இல: 662)

## கடற்படை விநியோக அதிகாரி

கொழும்பு, பெப். 23

ஸ்ரீலங்காக் கடற்படையின் வடபிராந்தியத்தின் பிரதம விநியோக அதிகாரியாக கொமாண்டர் ஹர்ஷா மாயதுன்ன நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் இவ்வாரம் தமது பதவியை ஏற்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இப்பதவியை வகித்து வரும் கொமாண்டர் எச். யு. சில்வா, கெத்தாரம விளையாட்டரங்கின் நிர்வாகியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

[எ]

## தோட்ட சேவையாளருக்கு மார்ச் 1 முதல் சம்பள உயர்வு

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்ட யாக்க கூட்டுத்தாபனம் ஆகிய இரு சபைகளின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ள தோட்டங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மார்ச் மாதத்திலிருந்து 15 வீத சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

கடந்த வாரம் தோட்ட சேவையாளர்கள் தொழிற் சங்கங்களுக்கும் மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, அரச பெருந்தோட்ட யாக்க கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வு வழங்குதல் மற்றும் தோட்டங்களில் நடைமுறையிலுள்ள ''சுப்பவைசர்'', ''கணக்கப்பிள்ளை'' போன்ற பதங்களை அகற்றி அவற்றுக்குப் பதிலாக முறையே ''கனிஷ்ட உத்தியோகத்தர்'', ''கள உத்தியோகத்தர்'' ஆகிய சொற்களை பயன்படுத்துவதெனவும் முத்தரப்பினரிடையே ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது.

வழங்கப்படவுள்ள புதிய சம்பளத்திட்டம் 1-1-1993 இல் இருந்து நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

[அ.5]

## ஜனாதிபதியின் ஆலோசகராக குணசிங்கம்

கொழும்பு, பெப். 23

இனவிவகார, தேசிய நல்லிணக்கம், புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதியின் விசேட ஆலோசகராக கலாநிதி சி. குணசிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் தமது கடமைகளை கடந்த வெள்ளிக்கிழமை ஏற்றுக்கொண்டார். இன விவகார, தேசிய நல்லிணக்க அமைச்சின் அலுவலகத்தில் இருந்து இவர் பணிபுரிவார் [illegible]

(எ)

## மலையகதமிழ் எம். பிக்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

### அமைச்சர் தொண்டமான் பேச்சு

இராகலை, பெப். 23

''எமது சமூகத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக 1947 ஆம் ஆண்டில் 7 பேர் இருந்தனர். அது பின்னர் குறைக்கப்பட்டு அண்மைக் காலத்தில் மீண்டும் அதிகரித்து இப்பொழுது 9 எம். பிக்கள் உள்ளனர்''

கிராமிய தொழில் துறை கால்நடை அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு. எஸ். தொண்டமான் இராகலையில் புதிய பாடசாலைக் கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:

இன்று மற்றவர்களைவிட தோட்டத் தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடனும் மரியாதையுடனும் வாழ்கின்றனர். பிரஜாவுரிமையைக் காட்டாமலேயே இன்று வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ள முடியும். இதற்குக் காரணம் ஒற்றுமைதான் என்றார்.

(அ)

## கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிப்பு

தென்மராட்சி, பெப் 23

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரிவுகளில், கட்டாக்காலியாகத் திரியும் நாய்களைப் பிடித்து அழிக்கும் பணியினை சாவகச்சேரி பிரதேச சபையினர் ஆரம்பித்துள்ளனர்.

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட இருப்பதால வளர்ப்பு நாய்களை கட்டி வளர்க்குமாறு பிரதேச சபை செயலர் அறிவித்துள்ளார்.

(எ-5-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தேக்கு அலுமாரிகள், டிரெசிங் ரேபிள், சாப்பாட்டு மேசை, லாச்சி மேசை, குசன் செற்றி, சோக்கேஸ், கட்டில், கடை சோக்கேஸ் [6X8], விறாக்கை [9X7] மற்றும் வீட்டுத் தளபாடங்கள் குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில், பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. [35314]

எமது சங்கத்தில் சுத்தமான பசு நெய் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் கீழ் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: பொதுமுகாமையாளர், கலாசாலை வீதி, யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். [சி-655]

### விற்பனையாகிறது

கும்பகர்ணன் வதைப்படலம் யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரி முதற்கலைத் தேர்வு G. A Q. பாலபண்டித மாணவர்களுக்கு ஒரு பாடநூல் எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும். மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர். (சி-384)

### வீடு வளவு விற்பனைக்கு

கைதடி நுணாவில் பகுதியில் அறவழிப் போராட்டக் குழு அலுவலகத்துக்கு அண்மையில் வருமானங்களுடன் கூடிய 9 பரப்புக் காணியும், கல் வீடு வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி. (35317)

### தேவை

ஆங்கில, தமிழ், தட்டச்சுத் தெரிந்த A/L படித்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நற்சான்றுப் பத்திரத்துடன் நேரில் வரவும். கு. வி. அச்சகம், 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (8247]

### பாலர் ஆசிரியராக

விரைவில் பயிற்சி ஆரம்பம்: க. பொ. த. (சா/த) கடைசித் தகைமை சனி, ஞாயிறு சமூகம் தர வசதியற்றோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (35295)

### ஆண்டு - 5

புலமைப் பரிசில் பரீட்சைக்கான கட்டுரைப் புத்தகம் விற்பனையாகிறது பெற்றுக் கொள்ளும் இடம்: அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-379)

### இலகு திருமண சேவை

30 வயது, உத்தரம் 1, செவ்வாய் 4, ஜேர்மனியிலுள்ள மணமகனுக்கு ஏற்ற மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணமாகி அழைக்கலாம். வேண்டிய மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார், கோயிலடி. (35303)

### காணவில்லை

5-2-95 அன்று பலாலி வீதியில் கோண்டாவில், திருநெல்வேலி சந்திகளுக்கு இடையில் விபத்து நடந்து "போக்" உடைந்த C64901 இலக்க ஹீரோ சைக்கிள் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். வை கேதாரநாதன், இல. 37/2, செட்டித்தெரு, நல்லூர். (35324)

### REPAIR'S!

Repairs! Are your Radios T.V s. Decks Giving Trouble? Bring them to us and Get them Repaired with Guarantee. Dilka Watch and Radio Works. 284, Stanley Road (Ariyakulam Junction) Close to Vanavil Jaffna, Branch Kandy Road Chavakachcheri. [சி-364]

## மணற்காட்டில் நரிகள் தொல்லை

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பிரதேசத்தில் நரிகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அங்கு நடுகை செய்த தென்னம் நாற்றுக்களை நரிகள் தாக்கிச் சேதப்படுத்தி வருகின்றன. இதனை அடுத்து இந் நரிகளை கட்டுப்படுத்த இத்தென்னை நாற்றினை, நட்டுப்பராமரித்து வரும் சூழல் பாதுகாப்பு நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

---

யாழ். பல்கலைக்கழக
வெளிவாரி பட்டப் படிப்பு

**FIRST IN ARTS**
**(G. A. Q.) 96**
**FIRST IN COM. 96**

விரிவுரைகள்

**ஆரம்பம்: 25 - 2 - 95**
(சனிக்கிழமை காலை 8 மணி)

விவரங்களுக்கு:
எஸ். அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
[சி/657]

---

## அறிவித்தல்

ஸ்ரீலங்கா டி.எ.எம். மருத்துவர்கள்
அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம்

எமது சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 26 - 02 - 1995 (ஞாயிறு) காலை 9-30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மாநகர சபை சித்த வைத்தியசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டி இருப்பதால் சங்க அங்கத்தவர்கள், அங்கத்தவர்கள் அல்லாத டி.எ. எம். மருத்துவர்கள் அனைவரும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

செயலாளர்
ஸ்ரீலங்கா டி. எ எம். மருத்துவர்கள்
அபிவிருத்திச்சங்கம்
யாழ்ப்பாணம்.

23 - 02 - 1995 (35328)

---

# 8 ஆம் ஆண்டு நினைவுச் சுடர்



## கிருஷ்ணபிள்ளை கலைச்செல்வன்

மலர்வு: 30 — 12 — 1963 உதிர்வு: 22 — 02 — 1987

திதி: **23 - 02 - 1995**

அன்புச் செல்வமே!

கலைமகளின் தவப்புதல்வன் என்பதை அறியாமலேயே
நாங்கள் கலைச்செல்வன் என்னும் நாமம் இட்டோம்.
அன்னை பக்கத்தில் தன்னை அலங்கரிக்க எல்லோரையும் -
ஆழ்கடலில் தத்தளிக்க விட்டு
உன்னை அழைத்தாளோ?

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா,
சகோதர, சகோதரிகள்.

23, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை.

[35311]

---

## புறநிலைப் படிப்புகள் அலகு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

EXTRA - MURAL STUDIES UNIT, UNIVERSITY OF JAFFNA.

புறநிலைக் கற்கைநெறிகள்:
EXTRA - MURAL COURSES;

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு பின்வரும் தலைப்புகளில் அடிப்படைக் கற்கை நெறிகளை 1995ஆம் ஆண்டு நடத்தவுள்ளது இவை சனி, ஞாயிறு தினங்களில் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும். இக்கற்கை நெறிகளைப் பயில ஆர்வம் கொண்ட 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் தமது முகவரியுடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுய விவரங்களைக் கொண்ட விண்ணப்பப்படிவம் மூலம் அடிப்படைக் கற்கைநெறியின் தலைப்பைக் குறிப்பிட்டுத் தனித்தனியாக விண்ணப்பிக்கவும். ஒருவர் எத்தனை கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம் ஒரே நேரத்தில் ஒரு கற்கை நெறியினை பயில மாத்திரம் அனுமதிக்கப்படுவர்.

(அடிப்படைக் கற்கை நெறிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதம் கிடைத்தபின்னர் அவர்கள் பதிவுக் கட்டணமாக ரூபா 100/- செலுத்த வேண்டும்)

1. அடிப்படைக் கற்கை நெறிகள்;
(குறைந்தது 40 மணித்தியாலங்கள்)
Foundation Courses:

01 1 வாகனப்பொறியியல் (Automobile Engineering)

01 2 தொழிற்றுறைப் பொறியியற் பிரயோகங்கள் (Industrial Engineering Applications)

01.3 வார்ப்புத் தொழிற்கலை (Foundry Practice)

01.4 சூழல் பாதுகாப்பு (Environmental - Conservation)

01.5 ஆரம்ப உளவியல் (Basic Psychology)

01 6 கிராமிய அபிவிருத்திக் கல்வி (Rural Development Studies)

01 7 சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான கணக்கு பதிவியல் (Book Keeping for small Enteroreneur]

01 8 களஞ்சிய முகாமை- (Stores Management)

01 9 அலுவலக முகாமை (Office Management)

புலமை சான்றோர் (RESOURCE PERSONS)

மேற்படி தலைப்புகளில் நடைபெறவுள்ள கற்கை நெறிகளில் விரிவுரை/செய்முறைப் பயிற்சிகளை வழங்கத் தகுதியுள்ள பல்கலைக்கழகத்திற்கு வெளியே உள்ள புலமை சான்றோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் தங்கள் தகைமையை உறுதிப்படுத்தக் கூடிய வகையிலமைந்த சுய விவரங்களைக் குறிப்பிட்டு புறநிலைப் படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்.

புறநிலைப் படிப்புகள்-
அலகு.
யாழ்ப்பாணம்.
15-02-95
(சி-697)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பதவி வெற்றிடம்

இப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து மாத்திரம் என்னால் 1995 - 03 - 17 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**பதவி:**
பாதுகாப்புச் சேவகர் (தாழ்தரம்)

**சம்பள அளவுத்திட்டம்:**
ரூபா 2455— 8x40 — 2,775/- மாதமொன்றுக்கு. (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் வழங்கப்படும்.)

**தகைமைகள்:**
1. எட்டாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. விளையாட்டிலும், சமூக சேவையிலும் தீவிரமாகப் பங்கு பற்றியிருத்தல் வேண்டும்.
3. உயரம்: 5 அடி 6 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
மார்பு: சாதாரண நிலையில் 32 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
4. வயது: விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**தெரிவு:**
பொதுவுளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

**குறிப்பு:**
1994-04-08 ஆம் திகதிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தாபனச் சுற்றறிக்கைக் கடித இல. 07/1994 க்கு அமைய, உணவு முத்திரை/ஜனசவியற்கு உரித்தான குடும்ப அங்கத்தவருக்கும் தீவிரவாதச் செயல்களினால் பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவருக்கும் அவற்றை உறுதிப்படுத்துமிடத்து மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது நிதிக்கிளையில் ரூபா 20/- ஐச் செலுத்தி மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/- க்கான காசுக் கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23x10 ச மீ அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

—பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1995 - 02 - 15
(சி-654)

---

இலங்கை
## இளங்கலைஞர் மன்றத்தின்
# 15 ஆவது இசை விழா

கலா மண்டபம் - சட்டநாதர் வீதி, நல்லூர்.

**13ஆம் நாள் 23 - 02 - 1995**
வியாழக்கிழமை

**சிற்றி மெடிக்கல்ஸ்**
யாழ்ப்பாணம்
ஆதரவில்

மாலை

**4-00 — 5-00 மங்கல இசை**
ரி. பாலகிருஷ்ணன், எம். ஆனந்தா — நாதஸ்வரம்
எம். முருகானந்தம், கே. விக்னேஸ்வரன் — தவில்

**5-00 — 5-20 பாட்டு**
சு. சரோஜினி, பு. பரந்தாமன் — பாட்டு
ப. உஷா — வயலின்
கே. மயூரன் — மிருதங்கம்

**5-20 — 5-40 வீணை இசை**
கு. சயந்தி, சா. சிவஜானா
வ பிரியதர்சினி, செ. உதயராணி
ரா. கிருசாந்தி, செ. ஜெயராணி
தே. நிமலஜோதி, செ. சிவசாயினி
க. சஜன் — மிருதங்கம்
அ. முரளீதரன் — கடம்

**5-40 — 6-00 புல்லாங்குழலிசை**
சசிரேகா பஞ்சமூர்த்தி — புல்லாங்குழல்
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

**6-00 — 6-20 வீணை இசை**
நாகச்சந்திரா அரவிந்தன், நாகச்சந்திரா தயாநி — வீணை
பி. ரதிரூபன் — மிருதங்கம்

**6-20 — 7-05 பாட்டு**
லசந்தி சத்தியநாதன் — பாட்டு
எஸ். வெங்கடேஸ்வரசர்மா — வயலின்
எஸ். துரைராஜா — மிருதங்கம்

**7-05 — 7-50 வீணை இசை**
அருட்செல்வி ஜேசுதாஸன் — வீணை
எஸ். துரைராஜா — மிருதங்கம்
எம். சஜன் — கடம்

**7-50 — 8-10 மங்கல விளக்கேற்றல்**
திரு. எஸ். சிசில் அவர்கள் (சிற்றி மெடிக்கல்ஸ்)
திரு. வி. வரதராசா அவர்கள் (சுண்டிக்குளி)
திரு. இ. அருட்செல்வம் அவர்கள் (ஏ. ஜே. சி. இன்ஸ்ரிரியூட், இணுவில்)
திரு. ஞா. அருளானந்தம் அவர்கள் (நிவாரண உத்தியோகத்தர், யாழ். மனித முன்னேற்ற நிலையம்)

★ தலைவர்
அருட்திரு எஸ் கில்லறி ஜெயநேசன் அடிகள் அவர்கள் (இயக்குநர், யாழ். மனித முன்னேற்ற நிலையம்)

★ பிரதம அதிதி
திரு. கே. பொன்னம்பலம் அவர்கள் (அரச அதிபர், யாழ்ப்பாணம்)

★ சிறப்பு விருந்தினர்
அருட்திரு எஸ். டேமியன் அவர்கள் (ஓ. எம். ஐ. எம். ஏ மருத்துவபீடம் யாழ். ப. க.)

**8-10 — 9-10 பாட்டு**
எஸ். பத்மலிங்கம், ஆர். குகானந்தன் — பாட்டு
ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின்
எம். சிதம்பரநாதன், ஆர். கிறிசாந் — மிருதங்கம்
எஸ். ராஜா — முகர்சிங்

**9-10 — 10-15 பரதநாட்டியம்**
தென்மராட்சி திலகநர்த்தனாலய மாணவிகள் தயாரிப்பு:
திருமதி யசோதரா விவேகானந்தன்

வாழ்த்துவோர்:
**மாலா மருந்தகம்**
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
[சி-541]

---

## பிரத்தியேக வகுப்புகள்

நடைபெறுகின்றன

G. A. Q. / B. A. — போதனை யாழ்ப்பாணம்

தமிழ், இந்துநாகரிகம்

தொடர்பு:
சர்மா
136, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(35331)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## உண்மையை பதிக்க உதவினர்

போர் தொடங்கிய கடந்த சுமார் ஐந்து வருடங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குப் பல தூதுக்குழுக்கள் வந்து போய்விட்டன. ஆகக் கடைசியாக இரத்தினபுரி எம்.பியும் இடதுசாரித் தலைவருமான வாசுதேவ நாணயக்காரா தலைமையில் சமாதான யாத்திரை மேற்கொண்டு பதினேழு பேர் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

முன்னர் வந்த தூதுக்குழுக்களால் இங்குள்ள நிலைமையைத் தெற்கு மக்களுக்குச் சரிவர எடுத்துக் கூறமுடியவில்லை. சிங்கள மக்கள் மனங்களில் யாழ்ப்பாண மக்களின் கஷ்டங்களைப் பதிக்கக் கூடியதாக நிலைமையை விளக்க முடியவில்லை. இங்கே வந்து யாழ்ப்பாணத்தைப் பார்த்துச் செல்லும் தூதுக்குழுக்களாக மட்டுமே அவை விளங்கின.

ஆனால் வாசுதேவ தலைமையிலான குழுவினர், கொழும்பு சென்று இங்குள்ள நிலைமைகளை அங்குள்ள மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எடுத்துரைத்துள்ளார்கள்.

போர் வெறியர்களே! ஒரு முறை யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள மக்கள் படும் அவலங்களைப் பாருங்கள்! இடிந்த கட்டடங்களையும் மக்களின் அவலங்களையும் கண்டபோது எங்கள் கண்களில் கண்ணீர்த் துளிகள் டவித்தன — என்று பௌத்த மத குரு சிங்கள மக்களின் மனதைத் தொடும் வகையில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

புதிய அரசு பதவியேற்ற பின்னர், வடக்கில் உள்ள டக்கள் நிம்மதியாக உண்டு உடுத்து உறங்குவதாக நாம் நினைத்திருந்தோம். ஆனால் அதற்கு முற்றிலும் மாறான நிலைமையே நாம் அங்கு கண்டோம் — என்று தூதுக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான திரு. பற்றிக்பெர்னாண்டோ உண்மையை எடுத்துரைத்திருக்கிறார்.

குழந்தைகளின் பட்டினி ஓலத்தையும், மக்களின் துயரக் கோலத்தையுமே நாம் அங்கு கேட்கவும், காணவும் முடிந்தது என்றும் அவர் இங்குள்ள நிலைமையை நெஞ்சு நெகிழ வைக்கும் மொழியில் கூறியிருக்கிறார்.

தமிழ் மக்களின் கலை, கலாசாரம், இலக்கியம் ஆகிய அவர்களது முதுசொத்துக்கள் — முது அம்சங்கள் வடக்கே அழிவுற்றுக் கிடக்கின்றன. —

தமிழினம் உரிமை பெற்று வாழ வேண்டும் என்பதற்காகவே இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைகிறார்கள் — என்று ஜயதிலக பண்டார என்ற உறுப்பினர் உண்மையை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். சமாதானத் தூதுக்குழுவை அழைத்ததன் மூலம் அவர்கள் அதனைப் புலப்படுத்தி விட்டனர்—என்று வாசுதேவ கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் வெளியிட்டார்.

வடபகுதி மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை முதலில் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை அரசிடம் வற்புறுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவற்றை எல்லாம் நோக்கும் போது வடபகுதி மக்களின் நிலையை தெற்குக்கு உள்ளபடி எடுத்துக் கூறியவர்கள் வாசு தலைமையில் வந்த தூதுக்குழுவினரே என்று துணிந்து கூறலாம்.

வாசுதேவ குழுவினரின் யாழ். விஜயம் சாதகமான நிலையை ஏற்படுத்தி உள்ளதாக அமைச்சர் கதிர்காமர் கூறியிருக்கிறார். அதாவது அவர்களது விஜயம் அரசாங்கத்தின் மீதும் ஓர் அழுத்தத்தைப் போட்டிருக்கிறது என்பதே இதன் அர்த்தமாகும்.

இங்கு வந்த தூதுக்குழுவின் கருத்துக்களை, வெளிப்படுத்தல்களை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக கவனத்திற்கு எடுக்கிறதோ இல்லையோ, சிங்கள மக்கள் உண்மை நிலையை புரிந்து கொள்ள அவை பெரிதும் உதவும். இது போன்ற உண்மை சொல்லும் தூதுக்குழுக்களின் வருகைகளே நல்விளைவைத் தரும்.

கப்பல் கொள்கலனுக்குள் மூச்சுத்திணறி மரணம்!

# ஜப்பானுக்கு வேலை தேடிச் சென்ற 4 இலங்கையர் சடலங்களாக மீட்பு!!

### மற்றொருவரைக் காணவில்லை

கொழும்பு, பெப். 23

தென் கொரியாவின் புஷான் துறைமுகத்தில் இருந்து கப்பலில் ஜப்பான் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது மர்மமான முறையில் காணாமற்போனதாகக் கருதப்பட்ட ஐந்து இலங்கையர்களில் மூவரின் சடலங்கள் வடகொரியாவின் கடற்கரையிலும், நான்காவது நபரின் சடலம் ஜப்பானில் புக்கோகா தீவிலும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஐந்தாவது நபருக்கு என்ன நடந்தது என்பது இன்னும் தெரியவரவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

கொழும்புக்குக் கிடைத்த அறிக்கைகளின் படி, இவர்கள் ஜப்பானில் தொழில் வாய்ப்புத் தேடிச்சென்றவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு தென்கொரியர்களின் உதவியுடன் இலங்கையில் உள்ள தனியார் தொழில் ஏஜென்ஸி ஒன்று தலா 2லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு இவர்களை அனுப்பியது என்று சொல்லப்படுகிறது.

புஷான் துறைமுகத்தில் வைத்து இவர்கள் ஐவரும் கொள்கலன் ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கப்பலில் ஏற்றப்பட்டனர். இரண்டரை தினங்களுக்குப் போதுமான உணவு, பிராண வாயு, தண்ணீர் ஆகியன அவர்களுக்கு வழங்கப்பட்டது.

வழமையாக தென்கொரியவில் இருந்து ஒரு கப்பல் ஜப்பானைச் சென்றடைய இரண்டரை நாட்களே எடுக்கும்

ஆனால் துரதிர்ஷ்ட வசமாக சம்பந்தப்பட்ட கப்பலில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதால் அது ஜப்பானைச் சென்றடைவதில் தாமதம் ஏற்பட்டதாகவும்—

அதன் காரணமாக உணவு, பிராணவாயு மற்றும் தண்ணீரின்றி இவர்கள் கொள்கலனுக்குள் மரணமானார்கள் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன பின்னர் விஷயத்தை அறிந்து கொண்ட கப்பலின் மாலுமிகள் அவர்களின் சடலங்களை கடலில் வீசி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் ஒருவர் ஜா-எல வாசியான பத்மசிறிலால் குணரத்ன என்று அடையாளங்காணப்பட்டார். ஜப்பானில் அவரது உடல் எரிக்கப்பட்டு அஸ்தி கொழும்புக்கு கொண்டு வரப்பட்டது. அதற்காக அவரது பெற்றோர் கொழும்பிலிருந்து ஜப்பான் சென்றனர். ஏனைய மூவரின் சடலங்கள் வடகொரியாவில் அடக்கம் செய்யப்பட்டன. (ஐ-எ)

## தெரிவு குழு முன் கூட்டணி சாட்சியம்

கொழும்பு, பெப். - 23

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னால், தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி வாய்மூலம் சாட்சியமளிக்கவிருக்கிறது.

ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் வாய்மூல சாட்சியமளிக்க திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## கலைத்திறன் போட்டிகள்

சாவகச்சேரி, பெப். 23

யாழ் கல்வித் திணைக்களத்தால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் கலைத்திறன் போட்டிகளில் வலய மட்டத்திலான போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம், 3 ஆம் திகதிகளிலும்—

மாவட்ட மட்டத்திலான போட்டிகள் ஜூன் மாதம் 16, 17, 19 ஆம் திகதிகளிலும் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5-152)

# முஸ்லிம் காங்., இ. தொ. காவுடன் நல்லுறவு வளர்க்க ரணில்விருப்பம்

கொழும்பு, பெப். 23

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடனும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடனும் சிநேக பூர்வமான நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ள ஐ தே. க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விரு கட்சிகளுடனும் பகைமை பாராட்டும் போக்கை தவிர்த்துக் கொள்வதில் அவர் தீவிர அக்கறை காட்டிவருவதாக கொழும்புப் பத்திரிகைகள் கருத்து தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் வெற்றிடமாக உள்ள இரண்டு எம்.பி. பதவிகளில் ஒன்றுக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரை நியமிப்பதற்கு ரணில் தயக்கம் காட்டி வருவதற்கு இதுவே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதிக்கத்தை உடைக்க, அப்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரை எம். பியாக நியமிக்க வேண்டும் என்று ஐ தே.க.தவிசாளர் சாகுல் ஹமீது, முன்னாள் சபாநாயகர் முஹம்மது ஆகியோர் வலியுறுத்தி வருகின்றனர்.

முன்னர் முஸ்லிம் காங்கிரஸின் எம் பியாக விருந்த சேகு இஸ்ஸதீன் என்பவரை எம். பியாக நியமிக்கும்படி விடுவிக்கப்பட்ட வேண்டுகோளை ரணில் நிராகரித்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. இக்கோரிக்கையை ஏற்பது எதிர்காலத்தில் முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டு வைக்கும் சாத்தியத்தை அழித்து விடும் என்று ரணில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதே போன்று —

தற்போது ஆளும் கட்சி வரிசையில் அமர்ந்துள்ள இ. தொ. காவின் எம். பிக்கள்மீதும் ஒழுங்குநடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை என்று ரணில் முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இ.தொ. காவுடன் கூட்டுச் சேரும் வாய்ப்பை இழக்க ரணில் விரும்பாததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்காவின் இந்த 'நெகிழ்ச்சி'ப் போக்கு ஐ. தே கட்சிக்குள் சில வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

# சார்க் உச்சி மாநாடு மே மாதம் நடக்கும்

ஒத்திவைக்கப்பட்டுள்ள சார்க் உச்சி மாநாடு எதிர்வரும் மே மாதத்தில் புதுடில்லியில் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது

எதிர்வரும் ஏப்ரலில் இம் மாநாடு நடத்தப்படவிருந்தது.

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ இக் காலத்தில் அமெரிக்கப் பயணம் ஒன்றை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார் இதன் காரணமாகவே மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் —

மே மாதத்தில் இம் மாநாட்டை நடத்த ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார். (ஐ-எ)

# அரசின் சமாதான முயற்சிகளுக்கு தாம் ஆதரவு என்கிறார் றொனி!

கொழும்பு, பெப் 23

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிக்கு தமது ஆதரவு இருப்பதாக முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் தெரிவித்தார்

கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகங்கள் அளித்த கூட்டு மதிய விருந்து உபசாரத்தில் கலந்து கொண்டு பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

''சமாதானத் தீர்வையே நான் வலியுறுத்தி வருகின்றேன் இதற்காக எனது அரசியல் எதிர்காலத்தை பணயம் வைத்து, நான் இதனைக் கூறி வருகின்றேன். இதனால் எனது கட்சியின் ஒரு பிரிவினரின் ஆத்திரத்துக்கு நான் ஆளாகியுள்ளேன்''— என்றும் அவர் கூறினார்.

''அரசின் சமதான முயற்சிக் குஎனது ஆதரவு உண்டு''— என்றும் அவர் தெரிவித்தார்.

# அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டோர் பிரிட்டனில் தங்க கட்டுப்பாடு!

### சட்ட விதிகள் கடுமையாக்கப்படும்

லண்டன் பெப் 23

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்கள், பிரிட்டனில் தொடர்ந்து பல ஆண்டுகள் தங்குவதை தடுக்கும் சட்ட விதிகள் கடினமாக்கப்படவுள்ளன.

பிரிட்டனில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்கள் வெளியேற்றப்படுவதற்கு முன்னர் இரண்டாவது தடவை மேன்முறையீடு செய்வதற்கும் —

மேன் முறையீட்டில் தோற்றவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு பிரிட்டனில் தங்குவதற்கும் —

குறிப்பிட்ட காலத்திற்கு மேல் பிரிட்டனில் தங்குபவர்கள் வெளியேற்றத்திற்கு எதிராக நீதிமன்றில் மனுச் செய்வதற்கும் — தற்போது அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

இனிமேல் இந்த நிலை கட்டுப்படுத்தப்படும் என்று பிரித்தானிய உள்நாட்டு அமைச்சர் மைக்கல் ஹோவார்ட் தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சின் கீழுள்ள அகதிகள் பிரிவுக்கு 150 அதிகாரிகளை மேலதிகமாக நியமிப்பதன் மூலம் அகதிகளின் விண்ணப்பங்களைக் கையாளும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் —

தற்போது சுமார் 56 ஆயிரம் அகதிகளின் விண்ணப்பங்கள் கையாளப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-14)

# வாசுதேவவின் சமாதான விஜயம் சாதக நிலையை ஏற்படுத்தியுள்ளது

### அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 23

வாசுதேவ நாணயக்கார தலைமையிலான குழுவின் யாழ். சமாதான விஜயம் சாதகமான நிலைவரத்தை ஏற்படுத்தியுள்ளது.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் முன் கண்டவாறு செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை தொடர்பாக வாசுதேவ [illegible] தொடர்ச்சியாக ஒரே மாதிரியான கொள்கையை [illegible] கடைப்பிடித்து வருகின்றார்.

அவர் எப்போதும் இனப் பிரச்சினைக்கு அமைதியான அரசியல் தீர்வையே வலி[illegible] என்றும் அவர் கூறினார். [illegible]

## புலிகளின் குரல் வானொலியில்

**23 — 02 — 1995**

**வியாழன் இரவு**

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10— சித்தமருத்துவக் குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — நிகழ்ச்சியில் ''புத்துயிர் பெறுகிறது'' குறுநாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8 40 — மொழியும் வாழ்வும்
- ★ 8-50 — தாயகப்பாடல்கள் என்பன இடம் பெறும்.

**24 — 02 — 1995**

**வெள்ளி காலை**

- ★ 7-02 — [illegible] வணக்கம்
- ★ 7-15— மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

**வியாழன் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30— இசையும் கதையும் — நிகழ்ச்சியில் அ. விஸ்ற்றா எழுதிய ''மன உறுதி''
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6 02 — பொன்விளையும் பூமி
- ★ 6-15 விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — கேள்வி பதில்— விளையாட்டுத் தொடர்பானவை
- ★ 6-20 — என் தெரிவு
- ★ 6-30— மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கத்தின் சமய அறிவுப் போட்டிகள் நடைபெறும் திகதி அடுத்த மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு நாள் இம்மாதம் 28 ஆம் திகதி எனவும் பரீட்சைக் குழு தெரிவித்துள்ளது. (ஐ-5)

# இசை விழாவில் நாளை

யாழ்ப்பாணம், பெப். 23

இளங்கலைஞர் மன்றத்தின் 15ஆவது ஆண்டு இசைவிழாவின் பதினான்காம் நாளான நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கே. உதயநாதன், ஆர். கோவிந்தராசா குழுவினரின் மங்கள இசை இடம்பெறும்.

5 மணிக்கு மன்ற மாணவர்களின் பாட்டு, வயலினிசை, வீணையிசையும் 6 மணிக்கு உஷாபரமாட்சக பாலனின் வயலினிசை. 6-45 மணிக்கு மேரி சறோஜா ஜஸ்ரின் பாட்டு, இரவு 7-50 மணிக்கு உ. ராதாக்கிருஷ்ணன், சு. கோபிதாஸ் குழுவினரின் வயலின் சேலோ 8-50 மணிக்கு தென்மராட்சி கலாலயம் வழங்கும் ''முழங்கும் முரசு'' [தேசிய ஆடற்கதை] கதகளி நடனம் என்பன நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் கலாநிதி சபா ஜெயராஜா தலைமையில் வி எஸ். பி. குறாப் ஆதரவில் நடைபெறும் நாளைய நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினமும், சிறப்புவிருந்தினராக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் கலந்துகொள்வர். [ஐ-14-111]

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், பெப். 23

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பி. ப. 2மணியளவில் மாவடி வட்டுக்கோட்டையிலுள்ள கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் யாழ். வலயம் -1 கல்விப் பணிப்பாளர் செல்வி. தி பெரியதம்பி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஐ-5)

★ ★ ★

கோண்டாவில் சி. சி. த. க பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று பிற்பகல் 2மணி முதல் பாடசாலைக்கு அருகில் உள்ள மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு. இ. சிவபாதசேகரம் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி திரு. எஸ். குகதாசன் கலந்துகொள்வார். (ஐ)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் பிரதேச செயலகப் பிரிவு கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டி நேற்று முதல் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★2 30மணி:-தொடர் ராடி வி.க எதிர் கலைவாணி வி.க.

★ 3.30 மணி:- ஈச்ச மோட்டை வி.க எதிர் கிறீன் ரீலட் வி க.

★ ★ ★

ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ் கிளை யாழ். மாவட்டரீதியில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடத்திவரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் 3 30 மணி முதல் நடைபெறவிருக்கின்றன. பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★பற்றிசியன் அணி எதிர் யாழ். பல்கலைக் கழக அணி

★உதயன் வி.க.அணி எதிர் சென்றலைட்ஸ் வி க. அணி. (உ)

# நாளை நடப்பவை

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி அங்கத்துவச் சங்கங்களைச் சேர்ந்த — தெரிவு செய்யப்பட்ட — பனந்தொழில் வல்லுநர்களுக்கும் மகளிர் குழு உறுப்பினர்களுக்கும் தமிழீழ பாருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த பயிற்சியில பங்குபற்றியவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை காலை 10 மணிக்கு மேற்படி கொத்தணி மண்டபத்தில் நடைபெறும் (க-14)

★ ★ ★

யாழ் புனித மரியாள் வித்தியாலய இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. சி. தார்சிசியஸ் தலைமையில் நடைபெறும்.

யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத் தலைவர் டாக்டர் ரி. டபிள்யூ ஜெபகுலராசா, திருமதி கிறிஸ்ரீனா ஞானதிலகராணி ஜெயகுலராஜா ஆகியோர் பிரதம விருந்தினராகவும் —

யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. கே. டபிள்யூ. விமலராஜன், புனித மரியாள் ஆலய பங்குத் தந்தை அருட்திரு. பிலேந்திரன் அடிகளார் ஆகியோர் விசேட விருந்தினராகவும் —

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். பொறுப்பாளர் செல்வி. திலகா சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றுவர். (க)

★ ★ ★

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான

## இன்று

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு அதிபர் திரு க ஜெபானந்தன் தலைமையில் நடைபெறும். (க)

★ ★ ★

வட்டு கிழக்கு துணைவி தமிழன் சனசமூக நிலைய முன்றிலில் இன்று மாலை 6மணிக்கு விடுதலைப் புலிகள மகளிர் அமைப்பைச் சேர்ந்த 2ஆம் லெப்டினென்ட் தாமரையின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்துவைக்கப் பட உள்ளது. (க-13)

★ ★ ★

வட்டுக்கோட்டை துணைவி வென்சஸ்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தால் அமைக்கப்பட்ட கலையரங்கத் திறப்பு விழா இடம்பெறும் (க-13)

கூட்டம் நாளை பிற்பகல் 2. 30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

இக்கூட்டத்தில பாடசாலைத் தொகை மதிப்பீடு. மாணவர் தொகை ஆசிரியர்கள் தொகை விபரம் பற்றி ஆராயப்பட உள்ளது. (க 153)

★ ★ ★

கைதடி முத்துக் குமாரசுவாமி மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் 1 30 மணிக்கு அதிபர் வே பாலசுப்பிரமணியம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (க 117)

★ ★ ★

சாவகச்சேரி நகரசபை பொது நூல் நிலைய வாசகர் வட்டத்தின் மாதாந்த அறிவியலரங்கு நாளை பிற்பகல் 3. 30 மணிக்கு நகரசபை சபா மண்டபத்தில் வட்டத் தலைவர் திரு. சி. நடராசா தலைமையில் நடைபெறும்.

அறிவியலரங்கில் தமிழ் இலக்கியத்தில் சமூகத்தின் அடித்தள மக்கள் என்னும் பொருளில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் துறைப் பேராசிரியர் கலாநிதி க. அருணாசலம் உரையாற்றுவார். (க-117)

★ ★ ★

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (க-135)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமானாறு செல்லச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் நாளை பிற்பகல் 3 மணிக்கு திரு. ஆறு திருமுருகன் வழங்கும் பெரிய புராணத் தொடர் நிகழ்வு சொற்பொழிவு இடம்பெறும். (க-14)

★ ★ ★

யாழ். அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் அரியாலை மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் அதிபர் திரு. பொ. நடராசா தலைமையில் நடைபெறும். (க 30)

## வடக்கில் --

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வடக்கு மக்கள் சமாதானக் குழுவை உற்சாகமாக வரவேற்றார்கள் அவர்கள் எங்களைத் தங்களில் ஒருவராகவே நடத்தினார்கள்

யாழ்ப்பாண மக்கள் தனிநாட்டில் சுதந்திரமாக வாழவே விரும்புகிறார்கள். ஆனால் சமஷ்டி அரசு ஒன்றை வழங்கினால் அதனைப் பரிசீலிக்கத் தயாராக உள்ளனர் — என்று கூறினார். (அ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு யுத்த சூழ்நிலையை நோக்கி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தாக விடுதலைப் புலிகள் நம்புகிறார்கள். தொடர்ந்தும் அவரது கரம் சுத்தமானதாக இருக்கவேண்டும்.

நிரந்தர சமாதானம் ஏற்படுவதாயின் யுத்தம் ஏற்படக்கூடிய காரணங்கள் அனைத்தும் களையப்படவேண்டும்.

நிரந்தர அரசியல் தீர்வு அவசியமென்றால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமாக முடிவு காணப்படவேண்டும்.

யுத்தம் தேவையில்லாத ஒன்று. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டால் யுத்தம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை

**நிபந்தனைகள் அல்ல**

யாழ்ப்பாண மக்களில் 20 வீதமானவர்கள் கடற்தொழிலாளர்களாவர். கடந்த ஐந்து வருடங்களாக அவர்கள் தொழிலின்றி அகதிகளாக இருக்கிறார்கள்.

தீவுப் பகுதியை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருப்பதால் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாகி உள்ளனர்.

இந்தப் பிரச்சினைகளை நாம் அரசுக்கு முன்வைத்தது நிபந்தனைகளாக அல்ல.

ஆனால் பூநகரி பாதையைத் திறக்க இராணுவம் இடம்கொடுக்கவில்லை. கடல் தொழிலாளர்கள் சுதந்திரமாக தொழில் செய்ய கடற்படை இடம்கொடுக்கவில்லை. தமிழ் மக்களுக்கு கிடைக்கும் அனைத்து சலுகைகளையும் இராணுவம் தடுக்கிறது.

இராணுவம் வழங்கும் ஆலோசனையின் வழியே அரசு இன்று செயல்படுவது போல் தெரிகிறது.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்று அரசு உரிமை கோரிக்கொள்வதாயின் அவர்களது கோரிக்கைகளையும் நிறைவேற்றவேண்டியதும் அரசின் கடமையாகும்.

**உருப்படியாக எதுவும் செய்யவில்லை**

பிரேமதாஸா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் — 5 வருடங்களாக — அடிப்படையான பிரச்சினைகள் தீர்க்கப்படாமல், வளர்க்கப்பட்டு வந்தன. புதிய அரசு பிரச்சினைகளைத் தீர்ப்போம் என்கிறது. ஆனால் உருப்படியாக எதனையும் செய்யவில்லை. அரசியல் தீர்வுபற்றி ஆராய்வதற்கான பேச்சுக்கள் தள்ளிப் போவதற்கு இதுவே காரணம்.

முப்பது வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த ஆனையிறவு முகாமை மூடுவது பூகோள ரீதியில் கஷ்டமானது என்றபடியால்தான் நாம் அந்த முகாமை மூடச் சொல்லி கேட்கவில்லை.

ஆனால் மூன்று வருடங்களுக்கு முன் உருவாக்கப்பட்ட பூநகரி முகாமை விலக்கி விடுவதால் பாதை மார்க்கம் வசதியானதாக அமையும் என யாழ். மக்கள் அரசை கேட்கிறார்கள்.

**யாழ்ப்பாணத்தை நோக்கியே குறி**

யாழ் குடாநாட்டை சுற்றி இருக்கின்ற தீவுப்பகுதிகளை கைப்பற்றி வைத்திருக்கும் இராணுவம் யாழ்ப்பாணத்தை நோக்கி குறி வைத்துக்கொண்டிருக்கிறது.

இங்கே உள்ள இராணுவத் தளபதிகளின் நோக்கம் ஒரு முறை யாழ்ப்பாணம் மீது பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதாகவே உள்ளது.

குடாநாட்டைச் சுற்றி 240 இராணுவ முகாம்கள் இருக்கின்றன. ஆனால் விடுதலைப் புலிகளும், யாழ். மக்களும் கேட்பது இவற்றில் ஒரே ஒரு முகாமை மட்டும் விலக்கிக் கொள்ள வேண்டும் என்றுதான்.

பூநகரி முகாமை 500 மீற்றர் தூரத்திற்கு அப்பால் கொண்டு செல்வது அர்த்தமில்லாத ஒன்றாகும்.

பேச்சுவார்த்தைகள் வெற்றியடையாமைக்கு காரணம் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் உள்ள நம்பிக்கையீனம்தான்.

இராணுவ நடவடிக்கைகள் மூலம் புலிகளை அழித்துவிடுவதனால் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடப்போவதில்லை.

அவர்கள் எங்களை கொன்றுவிடுவார்கள் என்பதால் எங்கள் பாதுகாப்பை நாங்களே அமைத்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது, அதனால்தான் விடுதலைப்புலிகள் யுத்தம் செய்யவேண்டிய தேவையும் அவசியமும் ஏற்பட்டது.

ஆனால் அரசினால் இந்த பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும்.

**யாழ். மக்களுக்கு என்ன கிடைக்கும்?**

புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படமுன்னர், மக்களுக்கு அவசியமான — அன்றாடம் துன்பம் தருகின்ற — பிரச்சினைகளை தீர்க்கவேண்டும். மக்களுடைய பிரார்த்தனையும், அவசியமும் பசியின்றி வாழவேண்டும் என்பதே ஆகும். பொருளாதாரத்தடை தீர்க்கப்படாமல்— பாதை திறக்கப்படாமல் — மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளினால் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு கிடைக்கப் போகும் பலன் என்ன?

வடக்கு - கிழக்கு பிரச்சினையை தீர்க்கப்போகின்றோம்; அந்த பிரதேசங்களை புனமைப்புச் செய்யப் போகிறோம் என்று அரசு உலகத்திற்கு காட்டிவருவது அரசுக்கு தேவையான வெளிநாட்டு உதவியை பெற்றுக் கொள்ளும் நோக்கத்திலேயே ஆகும்.

கடந்த ஒக்டோபர் 15 ஆம் திகதி ஆரம்பமான முதலாவது சுற்றுப் பேச்சுக்கள் முடிந்து 4 மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் உருப்படியாக எதுவுமே நடக்கவில்லை.

**நான்கு மணி நேரத்தில் என்ன பேச முடியும்?**

பேச்சுக்கு வரும் பிரதிநிதிகள் அரசியல் முடிவுகளை எடுக்க முடியாது; அவர்கள் அதிகாரிகள் மட்டுமே. காலை 10 மணிக்கு பேச்சுக்களுக்கு வந்து மாலை 4 மணிக்கு திரும்பிப்போகிறார்கள். 4 மணி நேரம் மட்டுமே பேச்சுக்கள் நடைபெறுகின்றன. ஒருபாரிய பிரச்சினையை இவ்வளவு இலகுவாக தீர்க்க முடியுமா? 7 வருடங்களுக்கு மேல் முற்றிப்போன பிரச்சினையை இவ்வளவு சுலபமாக தீர்க்க முடியுமா?

ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் 2 வருடங்கள் பேசியும் பிரச்சினையின் விளிம்பைக் கூட எட்ட முடியவில்லை. பிரச்சினையைத் தீர்க்க அரசின் முயற்சி குறைவாகவே இருந்தது.

இருபது வருடங்களுக்கு முன் தலைவர்கள் எடுத்துச் சென்ற அஹிம்சைப் போராட்டத்தை இராணுவம் அழித்துப் போட்டுவிட்டது. இதன் பின்னர்தான் தமிழர்கள் ஆயுதத்தை கையில் எடுத்தனர்.

இந்திய இராணுவம் இந்த நாட்டிற்கும், எங்களுக்கும் இடையூறுகள் செய்த போது ஜே. வி. பியும் எங்களுக்கு உதவ முன்வரவில்லை; அவர்களுக்கு எதிராக போரிடவில்லை.

ஆனால் இன்றுபொலிஸ், நீதிமன்றம், கல்வி என்பவற்றை நிர்வகித்து வருகிறது விடுதலைப் புலிகள் அமைப்பு.

**எங்கள் உரிமையை கேட்டவர்கள் நாங்கள்**

தென் குடிமக்கள் எங்களை பயங்கரவாதிகள் என்கிறார்கள். ஆனால் நாங்கள் எங்கள் உரிமையை கேட்கும் மக்கள்.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளினால் சிங்கள மக்களுக்கு சில இடையூறுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் யுத்த காலத்தில் இரு பகுதிக்கும் இவ்வாறான இடையூறுகள் ஏற்படுவது சகஜமே.

அவைகளை விடுத்து அது ஏற்பட என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். [illegible] முழும் ஒன்று சேர்ந்து பிரச்சினையை [illegible] வேண்டும்.

**கொழும்பில் உண்டா?**

இரவு 12 மணிக்கு பெண்கள் சைக்கிள்களில் ஏறி எந்தப் பாதையாலும் தனிமையில் செல்லக் கூடிய நிலை யாழ்ப்பாணத்தில் இருக்கிறது. நீங்கள் இருக்கும் கொழும்பின் இவ்வாறான நிலை இருக்கிறதா?

கேள்வி: - கடந்த காலத்தில் அரசியல் தலைவர்கள் கொலையுண்டது தொடர்பாகப் புலிகள் மீது குற்றம் சாட்டப்படுகிறதே?

**ராஜீவும் ஏனையோரும் ஏன் கொலையுண்டனர்?**

பதில்: - கடந்த காலத்தில் அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டது யாரினால் என்று ஆராய்வதை விட, அவர்கள் ஏன் கொல்லப்பட்டனர் என்று ஆராய்வது பிரயோசனம்மிக்கதாகும். தமிழர்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் தாங்களாகவே தங்கள் முடிவை தேடிக் கொண்டார்கள்,

ராஜீவ் காந்தியை கொலை செய்ததில் புலிகளின் தொடர்பு உண்டு என்று எவரும் கூறக்கூடும் ஆனால் ராஜீவ் காந்தி ஏன் கொல்லப்பட்டார் என்று அவர்கள் எவருமே சிந்தித்துப் பார்க்கவில்லை — என்றார்.

''திவயின'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் திரு. பாலசிங்கம் கூறியதாவது:

அரசியல் தலைவர்களின் கொலை குறித்து புலிகள் மீது குற்றம் சுமத்தப்படுவது தவறானதாகும். விடுதலைப் புலிகள் எந்த அரசியல் தலைவரையும் கொல்லவில்லை.

**10 ஆயிரம் பேரைக்கொல்ல உத்தரவிட்டவர் ராஜீவ்**

ராஜீவ் காந்தி ஏன் கொல்லப்பட்டார்? இந்திய இராணுவத்தை இங்கே அனுப்பி 10 ஆயிரம் தமிழர்களை கொல்ல உத்தரவிட்டார். அதனால் தானே மரணத்தைத் தழுவிக் கொண்டார். 10 ஆயிரம் மக்கள் கொல்லப்பட உத்தரவிட்ட ஒருவரின் மரணம் பற்றி பேசுவதில் அர்த்தம் எதுவும் கிடையாது.

சிங்கள இராணுவத்தினால் எமது மக்கள் 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். ஆனால் அதற்கு சிங்களப் படையினர் பொறுப்பல்ல அவர்களுக்கு உத்தரவிட்ட அரசியல் தலைவர்கள் தான் பொறுப்பு. அவ்வாறான தலைவர்களே தங்கள் முடிவைத் தேடிக்கொண்டவர்கள்

**பிரச்சினையைத் தீர்த்தால் கொலைப் பயம் ஏன்?**

சந்திரிகா சமாதானத்திற்கு விருப்பம் என்று சொல்கிறார். அவர் ஒருவர்தான் சுத்தமானவராக இருக்கிறார். தொடர்ந்தும் அவர் சுத்தமாக இருக்கவேண்டும்.

எமது மக்களின் பிரச்சினைகளை புரிந்துகொண்டு. பயனுள்ள வழியில் எமது பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தால் கொலை செய்யப்படுவது பற்றி பேச வேண்டிய அவசியமேயில்லை. இதுபற்றி தொடர்ந்து பேச நான் விரும்பவில்லை.

**எந்தத் தலைவரையும் கொல்ல அவசியமில்லை**

கேள்வி: அரசியல் கொலைகள் மீண்டும் தொடராது என நீங்கள் சொல்லவில்லையே?

பதில்: இப்பொழுது உள்ள நிலைமையின்படி எந்தத் தலைவரையும் கொலை செய்யவேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது. திரு. பிரபாகரனுக்கும் சந்திரிகாவிற்கும் இடையில் அரசியல் கொலைகளோ, கடத்தல்களோ நடக்காது என ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

கேள்வி: பூநகரிப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் பேச்சுக்கள் முறிவடையுமா?

பதில்: தடைகள் தீர்க்கப்படாமல் பேசுவதில் பயனில்லை. அதனை அரசு மனதில் எடுத்துக்கொண்டால் பிரச்சினையைச் சுலபமாகத் தீர்த்துக்கொள்ள முடியும். இந்த சின்னப் பிரச்சினையை தீர்க்காமல் இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

சொற்பநேரப் பேச்சுக்கள் மூலம் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது.

நான் இருவருடங்கள் கொழும்பிலே வந்து, தங்கியிருந்து பேசினாலும் தீர்க்கப்பட முடியாத பிரச்சினை இது. பேச்சுக்கு வருபவர்கள் அரசியல்வாதிகளும் அல்ல. அதிகாரிகள் ஹெலிக்கொப்டரில் வருகிறார்கள்; பேசிவிட்டு அவசர அவசரமாகத் திரும்பிப்போய் விடுகிறார்கள். 4,5 நாட்களுக்குத் தங்கி, மக்களைச் சந்தித்து பிரச்சினைகளைக் கேட்காமல் பிரச்சினை பற்றி விளங்கிக் கொள்ள முடியாது.

இந்த அரசில் பெரும் நம்பிக்கை இருந்தது. அது தற்போது குறைந்துவிட்டது. — என்றார். [உ-9]

---

## ஒப்புநோக்குநர்கள்

பத்திரிகையில் பணியாற்றுவதற்கு ஒப்புநோக்குநர்கள் தேவை.

இரண்டு வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும் தமிழில் மிகுந்த தேர்ச்சியும் ஆங்கில அறிவும் அவசியம்.

பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இரவு நேரப் பணியும் செய்யக் கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

ஜி. சீ. ஈ. உயர்தரத்தில் தமிழ் உட்பட மூன்று பாடங்களி சித்தி எய்திய 22 — 25 வயதெல்லைக்கு உட்பட்ட ஆண்கள் பயிலுநர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பூரண சுய விவரங்களுடனும், சான்றிதழ்களின் பிரதிகளுடனும் 28 - 02 - 1995 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**உதயன் வெளியீட்டகம்,**
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

[சி-661]

---

## யாழ். றோட்டறிக் கழகம்

சகல றோட்டறக்ட், இன்ரறக்ட் கழக தலைவர், செயலாளர்கள் அனைவரும் இன்று மாலை 4-30 மணிக்கு ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறும் சர்வ தேச றோட்டறியின் 90ஆவது ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இளைஞர் சேவை இயக்குனர்,
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[சி-659]

---

### யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

## அனைத்துலக மகளிர் தினம் - 1995

# போட்டிகளும் விவரங்களும்

**1. பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரை போட்டி**

| பிரிவு | பங்குபற்றும் ஆண்டு | பேச்சுப் போட்டி விடயம், நேரம் | கட்டுரைப் போட்டி விடயம், நேரம் |
|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 8, 9 | "பெண்கல்வியின் முக்கியத்துவம்" 5 — 7 நிமிடம் | பெண்கள் தலைமைத்துவம் 30 நிமிடம் |
| மத்திய பிரிவு | 10, 11 | அனைத்துலக மகளிர் தினம் 5 — 7 நிமிடம் | சமூகசேவையில் பெண்கள் 45 நிமிடம் |
| மேற் பிரிவு | 12, 13 | பெண்சமூக முன்னேற்றத் திற்கான தடை, காரணிகள் 6 — 8 நிமிடம் | சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பெண்கள் பணி 1 மணி |

**2. அங்கத்துவ சங்கங்களின் மகளிர் அங்கத்தவர் போட்டி**

| | விடயம் | நேரம் |
|---|---|---|
| பேச்சுப் போட்டி | இன்றைய பெண்களும், பாரதி கண்ட புதுமைப் பெண்ணும் | 6 — 8 நிமிடம் |
| கட்டுரைப் போட்டி | எமது பிரதேச அபிவிருத்தியில் பெண்கள் பணி | 1 மணி |

1. விண்ணப்ப முடிவுதிகதி - 6-3-95
2. சகல கட்டுரைப் போட்டிகளும் 12-3-95 காலை 9 மணிக்கும், பேச்சுப் போட்டிகள் அன்றைய தினம் 10 30 மணிக்கும் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.
3. போட்டியாளருக்கு தனித்தனி அழைப்பு அனுப்பப்படமாட்டாது.
4. ஒரு பாடசாலையில் ஒவ்வொரு போட்டிக்கும் இருமாணவருக்கு மேற்படாமல் பங்குபற்றலாம்.
5. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி "மாவட்ட செயலாளர், யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை, இல. 14. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
6. பாடசாலை மாணவர்களின் விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மாவட்ட செயலாளர்.

[சி/663]

---

## கழிவு அகற்றும் மாநகர பவுசர்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ். மாநகரப் பகுதியில் உள்ள கழிவு நீர் மற்றும் கழிவுப் பொருள்களை அகற்றும் பணியில்மாநகர கழிவகற்றும் பவுசர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இயந்திரம் மூலம் பவுசரில் கழிவு நீர் அகற்றப்பட்டு வேறு இடங்களுக்கு எடுத்து செல்லப்பட்டு புதைக்கப்பட்டு வருகின்றது. (க-17)

---

## கணக்கியல் மாணவர்களுக்கு

எனது வகுப்பு இன்றிலிருந்து வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

அன்புடன்
**D. SAM**
D. M. I

233 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(35339)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நேசமலர் பாலகிருஷ்ணன்

B.A (Cey.), Dip.-in-Ed. (Cey.)

(ஓய்வு பெற்ற ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

நுணாவில் மத்தியைச் சேர்ந்த திருமதி நேசமலர் பாலகிருஷ்ணன் 19-2-95 அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-2-95)வியாழன் மாலை 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப் பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
செ.பாலகிருஷ்ணன்
[கணவர்]

'சிவஸ்தான்'
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(35330)

## திருமதி செல்லம்மா கனகராஜர்

மல்லாகம் பொன்னகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகராஜரின் மனைவி செல்லம்மா நேற்றுக் காலமானார்.

இவர் கமலாதேவி, சரோஜினிதேவி, காலஞ்சென்ற சொக்கநாதர் மற்றும் சச்சிதானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீ அப்பாசாமி, நடராஜர், சொர்ணாம்பாள் கௌரிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீ3பதி, ஸ்ரீதேவன், ஸ்ரீராம், ஸ்ரீராஜன், ஸ்ரீகரன், ஸ்ரீரஞ்சினி, ஸ்ரீராகினி, பகீரதன், சடகோபன், காண்டீபன், தமயந்தி, விநோதினி, சஞ்சயன், காலஞ்சென்ற அரவிந்தன் மற்றும் ரமணன், பிரகாமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-2-95) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கெட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ந. பகீரதன்
(பேரன்]

'பொன்னகம்'
கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்.

(35341)

### நயினாதீவு

## கதிரேசு கந்தசாமி (திருநாவுக்கரசு)

நயினாதீவு 7 ஆம் வட்டாரம் திருநாவுக்கரசு என்றழைக்கப்படும் கந்தசாமி 16-02-95 அன்று நயினாதீவில் காலமானார்.

இவர் கதிரேசு, காலஞ்சென்ற பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்ற இராசரெத்தினம் – கண்மணி தம்பதியினரின் அன்பு மருமகனும், அன்னலெட்சுமியின் அன்புக் கணவரும், மதிபாலன் (லண்டன்), துதாபாலன் (ஜேர்மனி), சிறிபாலன் (பிரான்ஸ்), கஜபாலன், செல்வபாலன், சுதாகரன், குணாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கலா (லண்டன்), கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும், சருண்ஜனின் அன்புப் பேரனும், சரோஜினிதேவி, சாம்பசிவம (சோதிடர்), சிவபூரணி (ஜேர்மன்), லிங்கதேவி, சிதம்பரநடராசா (சௌபாக்கியா இன் கொழும்பு), இராசயோகபூபதி, வருணநாதன் (பொதுச் சுகாதார பரிசோதகர் நல்லூர்), நவபுஷ்பராணி, முருகபத்மராசா (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் —

கந்தையா, சரோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான இராசையா, ஞானசுந்தரம் மற்றும் யோகம்மா, மகாலட்சுமி, வரதாம்பிகை பாலசிங்கம் [ஹொலண்ட்], சந்திரவதனி [ஜேர்மனி], காலஞ்சென்ற செல்வராசா, மற்றும் பத்மநாதன், யோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நயினாதீவில் நடைபெற்றன, இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

103, காரைநகர் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்

தகவல்
க. சாம்பசிவம் (சோதிடர்)
[சகோதரன்] [35342]

### திருமதி

## இராமசாமி தெய்வானைப்பிள்ளை

தேவாலய வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராமசாமி தெய்வானைப்பிள்ளை அவர்கள் 22 - 02 - 1995 புதன்கிழமை இரவு காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமசாமியின் அன்பு மனைவியும், நவமணி (கொழும்பு), பரராஜசிங்கம் (சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் - யாழ்.), குமாரசிங்கம் (சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் - கொழும்பு), குலசிங்கம் [சுவிஸ்], பூலோகசிங்கம் [பிரான்ஸ்], பூபாலசிங்கம் (U.K.), துரைசிங்கம் [ஹொலண்ட்], சிவராஜசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நல்லைநாதன், குணபாக்கியலட்சுமி, சரோஜினிதேவி, றதி, இந்திரா, நிர்மலாதேவி, நீற்றா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று [23-02-95] வியாழக்கிழமை பி. ப. 1 மணியளவில் சங்கானையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து கரச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. பரராஜசிங்கம்
[மகன்]

தேவாலய வீதி,
சங்கானை

[35343[

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23- 02 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org